கண்ணோட்டம்

KANNOTTAM

சமாதானமும், சகோதரத்துவ வாழ்வும் பரஸ்பரம் விட்டுக்கொடுத்துப் பெற்றுக்கொள்ளுதல் எனும் நடைமுறையிலேயே அடையப்பெறுகின்றன.

தனிச்சுற்றுக்கு மட்டும்

வெளியீடு 03 | 05 ஏப்ரல் 2000 | அன்பளிப்பு ரூபா 10.00

யுத்தத்துக்கு முடிவுகட்ட

இலங்கைக்கு ஐ.நா. படை

இலங்கை அரசின் கோரிக்கையின் பேரில் இலங்கைக்கு ஐ.நா படைகள் அனுப்பப்படக்கூடும் என்ற பேச்சுக்கள் இங்கு அரசியல், மற்றும் பாதுகாப்பு வட்டாரங்களில் அடிபடத் தொடங்கியுள்ளன. அப்படையில் இந்திய இராணுவத்தினரே பெரும்பான்மையினராக இருப்பர் என்றும் கூறப்படுகின்றது.

கடந்த ஆண்டு நவம்பரில் வன்னி யுத்த களத்தில் அரசு படைகளுக்கு ஏற்பட்ட பின்னடைவு அதேவேளை யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஒரு தளத்தை ஏற்படுத்திக் கொள்ளும் முயற்சியில் புலிகள் பல நூற்றுக்கணக்கானோரைப் பலிகொடுக்க வேண்டி ஏற்பட்டுள்ளமை என யுத்தகள நிலைமையும்.

தமது படைக்கு மேலும் 15,000 பேரை, சேர்ப்பதில் அரசு எடுத்த முயற்சி சிறிய அளவிலும் வெற்றி அளிக்காமல் போயுள்ளமை, அதேவேளை வன்னியில் வலுக்கட்டாயமாக ஆள் சேர்க்கும் புலிகள் வன்னிமக்களின் பெரும் எதிர்ப்புக்கு உள்ளாகியிருக்கின்ற நிலைமை என இருதரப்பினருக்கும் ஆட்பலம் தொடர்பாக ஏற்பட்டுள்ள நெருக்கடியும்,

அரசியல் தீர்வுதிட்டம் பற்றி தமிழ்க்கட்சிகளுடனும் எதிர்க்கட்சியான ஐ.தே.க வுடனும் பேச்சு வார்த்தை நடாத்தி இணக்கம் கண்டுவரும் அரசுக்கு அதனை எவ்வாறு நடைமுறையில் செயற்படுத்துவது என திட்டவட்டமான நடைமுறைக்குப் பொருத்தமான ஒரு திட்டத்தைக் கண்டுகொள்ள முடியாமை, அதேவேளை அரசாங்கமும் தமிழ்க்கட்சிகளும் ஐ.தே.கவும் அரசியல் தீர்வுத்திட்டத்தில் ஓர் இணக்கப்பாட்டுக்கு வந்தால் அது புலிகளும் அத்திட்டத்தைச் சுற்றியே செயற்படவேண்டிய நிலைமையும் ஏற்படும்.

அத்துடன் இந்தத் தமிழ்க்கட்சிகளுக்கு இனப்பிரச்சினைக்கான தீர்வு விவகாரத்தில் பிரதான இடம் கிடைத்துவிடும் எனப்புலிகள் கருதுகின்றமை என அரசியல் தீர்வு தொடர்பான அம்சங்களும், இன்று அரசையும் புலிகளையும் ஐ.நா.படைகள் பற்றிசிந்திக்கக்தூண்டியுள்ளன.

ஐ.நா. படைகள் இலங்கைக்கு வருவதானால் தத்தமக்கு பாதகமான விளைவுகள் ஏற்படக்கூடிய நிலைமைகள் உள்ளன என்பதை இரு தரப்பினரும் கண்டுகொள்கின்றபோதிலும் இரு தரப்பினரும் தத்தமக்கு ஏற்படக்கூடிய தற்காலிகமான நன்மைகளையும் அவரவருக்கு அவசரமாக உள்ள தேவைகளையும் கருத்திற்கொண்டே அரசும் புலிகளும் ஐ.நா படைகள் பற்றி சிந்திக்கின்றனர் என்றே தெரிகின்றது.

ஐ.நா படைவேண்டும் என்று கூறாமல் யுத்த நிறுத்தமும், ஐ.நா கண்காணிப்புக்குழுவும் வேண்டும் என்று கூறினாலும், தாம் யுத்த முனையில் அடைந்துள்ள முன்னேற்றங்களை, அவ்வாறு ஒரு யுத்த நிறுத்தம் ஏற்படுவதற்கு முன்னர் பெற்றுக்கொள்ளக்கூடிய யுத்த கள முன்னேற்றங்களையும் தக்க வைத்துக்கொள்வதற்கும், தமது கட்டுப்பாட்டில் இருக்கும் பகுதிகளுக்கு ஒரு சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கும் புலிகள் ஐ.நா படைகளை வேண்டி நிற்பர் என்பதே தெளிவாகும்.

இந்தியாவின் நிலைப்பாடு

இந்தியா அண்மைக்காலங்களில் இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பான தனது நிலைப் பாட்டினை ஒவ்வொன்றாக ஆனால் திட்டவட்டமாக வெளிப்படுத்தி வருகின்றது. அவற்றைத் தொகுத்துப் பார்ப்போமேயானால்,

(1) இந்தியா இலங்கைத்தீவு இரண்டு நாடுகளாகப் போவதை அனுமதிக்க மாட்டாது.

(2) புலிகளின் வன்முறை அரசியலுக்கு ஆதரவில்லை.

(3) சந்திரிக்காவின் புதிய அரசியல் யாப்பு சீர்திருத்தப் பிரேரணைக்கு ஆதரவு.

(4) வடக்கு-கிழக்கு மாகா

தொடர்ச்சி 2ம் பக்கம்

தொண்டர் ஆசிரியர்களின் போராட்டம்

யாழ்ப்பாணம், அம்பாறை மாவட்டங்களிலுள்ள தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கியும், மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா தொண்டர் ஆசிரியர்கள் தமக்கு நிரந்தர நியமனம் கிடைக்காததையிட்டு விரக்தியும் வேதனையும் அடைந்துள்ளனர்.

இந்த நியமனங்கள் தமக்கு அப்பாற்பட்ட விடயம். கல்விச் சேவை ஆணைக்குழுவே இந்த நியமனங்களை மேற்கொள்ளுவதாக வடகிழக்கு மாகாண கல்வி செயலாளர் தெரிவித்துள்ளார்.

வடகிழக்கில் யுத்தம் பல கோடிக்கணக்கான ரூபாய்களை விழுங்கிக் கொண்டிருக்கையில் சில ஆயிரம் [illegible] வழங்குவதில் நிலவும் இழுபறி மிகுந்த விசனத்தை ஏற்படுத்துவதாக உள்ளது.

வடகிழக்குக்கு என புதிதாக 2500 ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கப்போவதாக அரசாங்கம் அறிவித்தது. அதில் முன்னுரிமையை தொண்டர் ஆசிரியர்களுக்கு வழங்குவதே நியாயமானதாகும்.

தொண்டர் ஆசிரியர்களைப் புறக்கணித்துவிட்டுப் புதியவர்களைத் தெரிவு செய்ய நேர்முகப் பரீட்சைகளுக்கு அழைப்பு விடுப்பது அநீதியாகும். யுத்த சூழ்நிலையில் பாடசாலைகளில் நிலவிய ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யத் தொண்டு செய்தவர்கள் இந்த ஆசிரியர்களே. இவர்களின் பெரும்பான்மையினர் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்துள்ளவர்களே. அவர்களுக்கு உடனடியாக நிரந்தர நியமனம் வழங்க முடியும். மேற்கூறியவர்களுக்கு இரண்டு அல்லது மூன்று ஆண்டு தவணையில் நியமனம் வழங்குதல் வேண்டும்.

இந்த தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கும் பிரச்சினை ஒரு தசாப்தத்துக்கு மேல் நீடித்து நிலவுகிறது.

இதே போல் வேலையற்ற பட்டதாரிகளின் பிரச்சினைகளும் தொடர்ச்சியாக நிலவிவரும் ஒன்றாகும்.

தொடர்ச்சி 2ம் பக்கம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இலங்கைக்கு.....

01ம் பக்கம் தொடர்ச்சி

ணம் பிரிக்கப்படாமல் ஒரே மாகாணமாகவே தொடர்ந்து இருக்க வேண்டும்.

(5) இலங்கையோடு இந்தியாவின் பொருளாதாரத்தை நெருக்கமாக்குதல்.

(6) இந்திய இலங்கை சமய, கலை, கலாச்சார உறவுகளை புதுப்பித்து வளர்த்தல்.

(7) இலங்கையில் நிலவும் பயங்கரவாதம், அரசியல் கிளர்ச்சிகள் இந்தியாவின் எந்த மூலையிலும் பாதிப்பை ஏற்படாது பார்த்துக்கொள்ளல்.

இலங்கை தொடர்பாக இவ்வாறான கொள்கைகளைக்கொண்ட இந்தியாவோடு இப்போது இலங்கை அரசாங்கம் நெருக்கமாக ஒத்துழைக்கின்றது.

முன்னர் சிறிலங்கா சுதந்திரக் கட்சித் தலைமையே இந்தியாவோடு நெருக்கமான உறவைப் பேணிவந்தது. ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைகள் டி.எஸ். சேனநாயக்கா தொடக்கம் பிறேமதாசா வரை இந்தியாவைத் தூரத்தே வைத்தல் என்ற அரசியற் பொருளாதார அணுகு முறையையே கடைப்பிடித்து வந்தனர்.

ஆனால் ரணில் விக்கிரமசிங்கா அதற்கு மாறாக இந்தியாவோடு நெருக்கமானவராக உள்ளார். இப்போது அவரைச்சுற்றி இருப்பவர்களும் இந்தியாவோடு நெருக்கமாக இருப்பதையே விரும்புபவர்களாக உள்ளனர்.

நோர்வே அரசு இலங்கை அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் ஓர் இணக்கப்பாட்டை ஏற்படுத்துவதற்கான அனுசரணையாளராகச் செயற்படுவதற்கு முன்வந்துள்ள விடயத்தில், இலங்கை அரசாங்கம் இந்திய அரசுக்கு ஒவ்வொரு அம்சத்தையும் அறிவித்தும் ஆலோசனையைப் பெற்றுமே செயற்படுகின்றது.

இவ்விடயத்தில் பிரித்தானியாவின் அக்கறையும் ஈடுபாடும் இப்போது அதிகமாக வெளிப்படுத்தப்படுகின்றது. பிரித்தானியா வடஅயர்லாந்துக்காக தான் முன்வைத்த தீர்வையே இங்கு எதிர்பார்க்கின்றது. அமெரிக்காவும் வடஅயர்லாந்துக்கான தீர்வை ஆதரிக்கிறது.

இலங்கை அரசாங்கம் பிரித்தானியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இந்த விடயத்தில் மிகுந்த முக்கியத்துவம் அளித்தே வருகின்றது. இலங்கையின் தமிழ் அகதிகள் என்கின்ற விடயம் தொடர்பாக கனடா, பிரான்ஸ், ஜேர்மனி ஆகியனவும் இலங்கையின் இனப்பிரச்சினை தீர்வில் மிகுந்த அக்கறை காட்டி வருகின்றன. இந்து சமுத்திரப்பிராந்தியத்தில் உள்ள ஒரு வளர்ச்சி அடைந்த நாடு என்றவகையில் அவுஸ்திரேலியாவும் மிகுந்த ஈடுபாடு காட்டி வருகின்றது.

இந்த நாடுகள் ஒவ்வொன்றும் இலங்கையின் இனப்பிரச்சினைக்கான தீர்வில் இந்தியாவின் முக்கியத்துவத்தையும் கூடுதலான பங்கையும் அங்கீகரித்தே செயற்படுகின்றன.

யுத்த நிறுத்தம் ஐ.நா படை

யுத்த நிறுத்தம் ஒன்று செயற்படாமல் இங்கு பேச்சு வார்த்தை என்பது ஆரம்பிக்கப்படமாட்டாது என்றே தெரிகின்றது.

அதேவேளை யுத்தநிறுத்தம் என்பது இங்கு வெறுமனே அரசுப்படைகள் முகாம்களுக்குள் முடங்குவதாகவே அமையும் என்பதால் அரசு இதற்குத் தயாராக இருக்காது. நிபந்தனைகள் இருக்கக்கூடாது என்று அரசும் புலிகளும் கூறிக்கொள்கின்ற போதிலும் அவர்கள் நிபந்தனைகள் விதிப்பதிலேயே அக்கறையாக உள்ளன.

இலங்கையின் கடந்த கால அனுபவத்தைப் பார்க்கையில் சர்வதேச நாடுகள் களத்தில் தமக்கு ஒரு பிடிமானம் இல்லாமல் இங்கு தமது ஈடுபாட்டுக்கு ஒரு முக்கியத்துவம் கிடைக்காது என்பதைப் புரிந்தே வைத்திருக்கின்றன.

எனவே தர்க்க ரீதியாகப்பார்க்கின் யுத்த நிறுத்தம் என்பது ஐ.நா.படை இல்லாமல் நடைபெறமாட்டாது என்றே புரிந்து கொள்ளவேண்டியுள்ளது.

அவ்வாறு வரும் படையில் இந்திய இராணுவத்தினருக்கே கூடுதல் இடம் அளிகப்படும் என்பதும், அதையே இந்தியா விரும்பும்-எதிர்பார்க்கும் என்பதும், அதன் மூலம் மட்டுமே ஐ.நா படை என்பது இலங்கைக்கு வருவது சாத்தியமாகும் என்பதுவும் இயல்பாகும்.

இந்தியா இலங்கைக்கு இந்தியப்படைகள் என்ற வகையில் தனது படைகளை அனுப்பிய அரசியல் பத்து ஆண்டுகளுக்கு முதலிலேயே முடிந்துவிட்டது.

அதன் பின்னர் பொஸ்னியா-ஹெர்சகொவீனா, சோமாலியா, கொசோவோ, கிழக்கு தீமோர் என ஐ.நா படைகளாகவே இந்தியப்படைகள் சென்றுள்ளன.

ஐ.நா படைகள் இலங்கைக்கு அனுப்பப்படுவதையும் அதில் இந்தியப்படைகள் கூடுதலாக பங்கில் ஈடுபடுவதையும் தமிழ் நாட்டின் அரசியல் தலைவர்களும் விரும்புவர். இது தொடர்பாக பேச்சுவார்த்தை நடாத்துவதற்கு இந்திய அரசின் ஒப்புதலுடன் கருணாநிதி அவர்கள் நோர்வே செல்ல உள்ளார் என்ற செய்திகளும் வெளிவந்துள்ளன.

தமிழ்ப்பிரதேசங்களில் சமாதானமும் ஜனநாயகமும் உருவாக்கப்பட ஐ.நா படைகளை நம்புவதைத்தவிர தமிழ் மக்களுக்கும் வேறு வழியில்லை.

தமது பிள்ளைகள் யுத்த களத்திற்குச் சென்று பிணமாகத்திரும்புவதை நிறுத்த சிங்கள மக்களுக்கும் இதைவிட வேறு வழியில்லை.

ஐ.நா. படைகள் யுத்தம் செய்வதற்காக வரமாட்டார்கள். யுத்தமில்லாமல் நிறுத்தப்படும் யுத்தம் இறுதியாக முடிக்கப்படும் யுத்தம் என்ற நிலை ஏற்பட வேண்டும். அதுவரை ஆயுதம் தாங்கிய அனைவரும் தத்தம் முகாம்களுக்குள் முடங்கி இருப்பதே அவர்கள் உண்மையில் மக்களுக்குச் செய்யும் சேவையாகும்.

1989ம் ஆண்டு இந்திய அமைதிப்படைகளுக்குப் பதிலாக ஐ.நா அமைதிப்படைகள் வரவேண்டும் என்ற கருத்துக்கள் எழுப்பப்பட்டபோது மறைந்த தோழர் பத்மநாபா அவர்கள் ஐ.நா. படைகள் வந்தாலும் புலிகள் யுத்தத்தைக்கைவிட்டு சமாதானத்தையும் ஜனநாயகத்தையும் ஏற்றுச் செயற்பட முன்வருவார்களா? புலிகள் சண்டை பிடிப்பதுதான் தமது அரசியல் என்பதை மாற்றிக்கொள்ளாதவரை எந்தப்படை வருவதாலும் என்ன பயன்? எனக் கேள்விகள் எழுப்பினார். பத்துவருடங்கள் கழித்திருந்தாலும் இன்னமும் அந்தக்கேள்விகள் காலத்துக்குப் பொருத்தமானவையாகவே உள்ளன.

புலிகளின் பதில்கள் இந்த நாட்டு மக்கள் அனைவரதும் நன்மை கருதியதாக இருக்கவேண்டும்.

சர்வதேச நாடுகள் இந்தக்கேள்விகளுக்கான பதில்களைத் தெளிவாகப் புரிந்து கொண்டு அதற்குத் தம்மைத் தயார் படுத்திக்கொண்டதன் பின்னரே தான் ஐ.நா அமைப்பு இலங்கையில் காலடி வைப்பதைத் தீர்மானிப்பார்கள். ●

தொண்டர் ஆசிரி.....

01ம் பக்கம் தொடர்ச்சி

மிகவும் கஷ்டமான சூழ்நிலையில் வேலை செய்யும் இந்த தொண்டர் ஆசிரியர்களின் பிரச்சினை மனிதாபிமானக் கண்ணோட்டத்தில் அணுகப்பட வேண்டியதொன்றாகும்.

பலர் பாதுகாப்பற்ற சூழ்நிலையில் நாட்டைத் துறந்து வேறு நாடுகளுக்கு ஓடிக்கொண்டிருக்கையில் இவர்கள் மாணவர்களைத் தூக்கி நிமிர்த்த அதுவும் யுத்தத்தின் சாயல்படிந்த கிராமங்களில் கல்வி எனும் கைவிளக்கைப் பிடித்துக் கொண்டு நிற்பவர்கள். இவர்களின் மனம்நோகும்படி நடந்துகொள்வது சகல தார்மீக நெறிமுறைகளுக்கும் முரணானதாகும்.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி இந்த ஆசிரியர்களின் போராட்டத்துக்கு முழு ஆதவையும் வழங்கிவருகின்றது. இவர்களின் தொண்டைப்பெற்றுக்கொண்ட பள்ளிகளில் கூட அதிபர்களும், சக ஆசிரியர்களும், பெற்றோர்களும் இவர்களுக்குத்துணையாகப் குரல் கொடுக்க வேண்டும் போராட வேண்டும்.

தொண்டர் ஆசிரியர்களின் இந்த நிலைமைக்கு யார் பொறுப்பு என்று கேள்வி எழுப்பி புறக்கணிப்பதை விட்டு விட்டு அரசாங்கம் உடனடியாக அவர்களுக்கு நியாயம் வழங்கி இந்தப்பிரச்சினைக்கு முடிவுகட்டவேண்டும். ●



ஒன்றுபட்டால்...

மட்டக்களப்பில் நடந்த மாபெரும் சமாதானப்பேரணி பாதிக்கப்பட்ட மக்களின் உள்ளக் கொதிப்பாக இருந்தது. அதைவிட முக்கியமானது அனைத்துக் கட்சிகளும் ஒன்றுபட்டு இதை முன்னெடுத்திருந்தது.

கே. டானியல்
மட்டக்களப்பு.

பாஸ்(ப்போர்ட்)

பாடுமீன் நாட்டுக்கும் பாஸ்! பாதுகாப்புக்காக எனக் கூறிக்கொண்டு நடைமுறைப்படுத்த முனையும் சட்டங்களினால்தான் மேலும் பிரச்சினைகளும் அரசின் மீது மக்களுக்கு நம்பிக்கையீனங்களும் ஏற்படுகின்றன. இது மூட்டைப்பூச்சிகளைக் கொல்ல வீட்டைக் கொழுத்துவது போலாகும். மக்களை நாயாய் பேயாய் அலையவைக்கும் இது போன்ற நடவடிக்கைகளை அரசு உடனடியாகக் கைவிட வேண்டும். போகிற போக்கில் பாஸ்போட் விசாக்களும் எடுக்கச் சொல்லுவார்களோ..

–எஸ். கிறிஸ்டி, மட்டக்களப்பு.

யுத்தத்தின் கரங்களில்

யுத்தத்தின் கோரப்பிடிக்குள் சிக்குண்டுபோன கிருஷாந்தி, கோணேஸ்வரி, சாரதாம்பாள்... என்று பட்டியல் நீள்கிறது. ஆனால், இங்கு கௌரவ போர்வைக்குள் மௌனித்திருக்கும் எத்தனையோ பெண்களைப் பற்றி யாரறிவார்?

–சி. மனோரண்மணி, யாழ்ப்பாணம்.

பேச்சு வார்த்தைகள்

பல மாதங்களுக்குப்பின் கண்ணோட்டம் கிடைத்தது. நோர்வேயின் பிரசன்னம்! நம்நாட்டுக்கு கிட்டியதோர் அரியதோர் வாய்ப்பு. அரசு, எதிர்க்கட்சி மற்றும் தமிழ் மக்களின் விமோசனத்துக்காக தம்மை அர்ப்பணித்துள்ளதாகக்கூறும் அனைத்துத் தமிழ்க்கட்சிகள், ஏனைய அமைப்புக்கள் என்பனவும் ஒரு பொது நல்லெண்ணம் கருதி இதயசுத்தியுடன் செயற்படவேண்டும். அதுவும் காலத்தை வீணடிக்காது முன்னெடுக்கப்பட வேண்டும். விடுதலைப் புலிகளும் பேச்சுவார்த்தைக்கு முன்வரவேண்டும். இச்சந்தர்ப்பத்தையும் தவறவிட்ட துரோகத்தனத்துக்கு யாரும் ஆளாகக்கூடாது.

–க. தவராசா, திருகோணமலை.

முகத்தின் முகம்

கடந்த தைப்பொங்கல் தினத்தன்று சக்தி தொலைக் காட்சியில் ஒளிபரப்பான முகம் திரைப்படம் பற்றிய விமர்சனம் படித்தேன். "நல்லதோர் நாளில் என்னத்தைப் போட்டு அறுக்கப்போகிறார்களோ" என்று பயந்திருந்த எனக்கு அதிர்ச்சியாக இருந்தது.

வெறும் மகுடி நாதம்போல் ஆரம்ப வரிகளே என்ன என்று விளங்காத பாடல்களுடன் சதையும் கதையும் எடைபோடும் தற்கால ஒருசில திரைப்படங்களை விட நல்லதோர் படத்தைப் பார்த்த திருப்தி இருந்தது. வெளிநாடு போய் பணக்காரர்களாகி சொகுசான வாழ்க்கை நடத்துவர்களும் உண்டு. எத்தனையோ கற்பனைகளுடன் கடன்பட்டுக் கடல் கடந்து சென்று சொல்லொணா சோகச் கமைகளுடன் வாழ்பவர்களும் உண்டு எனும் நிதர்சனத்தை உணர்த்தியது. எல்லாவற்றுக்கும் மேலாக நம்நாட்டு கலைஞர்களுக்கு இத்தனை திறமையுண்டு என்பதை எண்ணிப்பார்க்க வியபாக உள்ளது.

–ம. தயாபரன், தம்பிலுவில்.

வேதாளங்கள்

நோர்வேயின் சமாதானப் பேச்சுவார்த்தைக்குப், பழையபடி சிங்கள இனவாத வேதாளங்கள் முருங்கை மரத்தில் ஏறியுள்ளன. இந்தியா அனுசரணையாளராக வரவேண்டும் என கருத்தும் தெரிவித்துள்ளனர். நோர்வே முன்வராது இந்தியா வந்திருந்தால்கூட இவர்கள் அதற்கும் முரண்பட்டே இருந்திருப்பர். மொத்தத்தில் இவர்களது போக்கே இப்படித்தான். நாட்டின் 90 வீதமான சிங்கள மக்களும், தமிழ் மக்களும் சமாதானத்தையே விரும்புகின்றார்கள். நாட்டின் ஒருவீதம்கூட இல்லாத இனவாதிகள் கால்தூசுக்குச் சமமானவர்களே.

வேலுப்பிள்ளை குணசீலன்
அக்கரைப்பற்று.

இதயசுத்தி

பொ.ஐ.மு அரசும், ஐ.தே.கட்சியும் இனப்பிரச்சினைகளுக்கான சமாதான உடன்பாடு குறித்து பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்துள்ளது. கடந்த காலங்களிலும் ஐ.தே.க இனப்பிரச்சினை தீர்வுக்காக சர்வகட்சி மாநாடு, பாராளுமன்ற தேர்வுக்குழு என்றெல்லாம் நடத்தியிருந்தனதான். இருந்தும் அவையெல்லாம் வெறும் கண்துடைப்புக்காகவும், காலத்தை இழுத்தடிப்பதற்காகவுமே இருந்தது. இம்முறையாவது உண்மையாகப் பேச வேண்டும்.

ஆர். சாந்தசீலன்
வவுனியா.

விளம்பரம்

தீபாமேத்தாவின் சொல்லப்பட வேண்டிய சுதந்திரமான எண்ணங்களுக்கு இந்துமத தீவிரவாதிகளால் போடப்படும் தடையே அவ்விடயங்களை மென்மேலும் காத்திரமாக்குகின்றது. எத்தனையோ விசயங்கள் இருக்கும்போது குறைகளை மட்டும் ஏன் பெரிதுபடுத்த வேண்டும் என அவர்கள் கேள்வி எழுப்பினாலும், வரலாற்றின் சில முக்கிய நிகழ்வுகளை மக்கள் அறிந்துகொள்ளவும், அவற்றை ஆவணப்படுத்தவும் திரைப்படங்கள் பெரிதும் பயன்படும். எது எப்படியிருந்தபோதும், தீபாமேத்தாவின் "பயர்" திரைப்படம் போல் விளம்பர செலவுகள் இல்லாமலேயே உலகளாவிய ரீதியில் புகழ்பெறும் அளவுக்குப் பிரச்சாரப்படுத்தும் இந்து தீவிரவாதிகளைப் பாராட்டாமல் இருக்கமுடியுமா.

க. அருணன்
மொத்துவில்.

தோழர்களே, நண்பர்களே, வாசகர்களே!

அபிப்பிராயங்கள், விமர்சனங்கள், ஆலோசனைகளையும், ஆக்கங்களையும் கண்ணோட்டம் வரவேற்கிறது.
அனைத்து நேரடித் தொடர்புகளுக்கும்:

37/2, 1/1, Wimalasara Road,
Kalubowila, Dehiwala.

E.P.I.C., Box No: 95,
95144, Garges Les,
Gonnesse Cedex,
France.

E.P.I.C., Box No: 0362
71603 Ludwigsburg,
Germany.

B.M. Box No: 1738,
London - Wcix - 3NN,
U.K.

P - Fach No: 506,
Bern - 17,
Switzerland.

310 ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்.
☎ 021 2022

No: 1/1 நெவில் வீதி
திருகோணமலை.
☎ 026 24221

29A, வாவிக்கரை வீதி-1
மட்டக்களப்பு.
☎ 065 25669

B30, யூ.சி. குவாட்டஸ்
குருமண் காடு,
வவுனியா.
☎ 024 23102

மின் அஞ்சல் முகவரி (E-Mail Addresses)
epiclondon@gn.apc.org - London

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சடலங்களால் நிரம்பும் வவுனியா வைத்தியசாலை

(வவுனியா நிருபர்)

வவுனியா ஆஸ்பத்திரி பிரேதஅறை சடலங்களால் நிரம்பி வழிகிறது. சிறுவர்கள், குழந்தைகளின் சடலங்களே மிக அதிகம் எனும் விடயம் அதிர்ச்சியூட்டுவதாக இருக்கிறது. போசாக்கின்மை, வறுமை என்பன சிசு மரணங்களையும், சிறுவர்களின் மரணங்களையும் அதிகரிக்கச் செய்துள்ளன.

ஆஸ்பத்திரியில் வேலையாட்கள் பற்றாக்குறை என்னும் காரணமே உடனுக்குடன் சடலங்களை அடக்கம் செய்வதில் தாமதங்களை ஏற்படுத்துவதாகத் தெரிகிறது. ஆஸ்பத்திரியிலிருந்து சுமார் 5கிலோ மீட்டர் தூரத்திலுள்ள பூந்தோட்டம் மயானத்திலேயே அடக்கம் செய்ய வேண்டியுள்ளது. இதற்கான வாகன வசதியின்மையும் ஒரு காரணமாக இருக்கிறது. வவுனியா நகரசபையின் ரெக்டரை வாடகைக்கு அமர்த்தியே சடலங்களைக் கொண்டு செல்கிறார்கள்.

வவுனியா ஆஸ்பத்திரியின் வசதிகள் அதிகரிக்கப்படுவதும், போதியளவு வேலையாட்களை நியமிப்பதும்,பிரேதங்களைக் கொண்டு செல்வதற்கான வாகன வசதிகளை செய்வதும் மாகாண சுகாதார அமைச்சின் கடமையாகும். ஆனாலும் வவுனியா வைத்தியசாலை தனது சக்திக்கு மிஞ்சிய சேவைகளையே செய்து வருவதாகவம் தெரிகிறது.

அதற்கேற்ப அதன் ஆற்றல், வளங்கள் இன்றைய காலகட்டத்தில் அதிகரிக்கப்பட வேண்டியது அவசியமாகும். வன்னி மாவட்டத்தின் தலைமைவைத்தியசாலையாகச் செயற்படும் வவுனியா ஆதார வைத்தியசாலையின் பிரச்சினைகள் தொடர்பாக அரசியல் மட்டத்திலும் மாகாண சுகாதார அமைச்சு மட்டத்திலும் உரிய நடவடிக்கைள் மனிதர்பிமான அடிப்படையில் எடுக்கப்பட வேண்டும்.

மரணிக்கும் குழந்தைகளில் அதிகமானோர் வவுனியா அகதி முகாம்களைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. குழந்தைகளின் மரணங்கள் யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட வேண்டும் என்பதையும் அறைகூவி நிற்கின்றது. •

சமூர்த்தி மன்னார் புறக்கணிப்பு

(மன்னார் நிருபர்)

மன்னார் மாவட்டத்தில் இது வரை இளைஞர், யுவதிகளுக்கு சமூர்த்தி நியமனங்கள் வழங்கப்படவில்லை.

பொ.ஐ.மு அரசாங்கம் பதவிக்கு வந்த காலம் தொட்டு இன்றுவரை நாட்டில் கிராமங்களின் மூலை முடுக்குகளிலெல்லாம் பேசப்படும் இவ் விடயமானது மன்னார் மாவட்டத்தில் மறுக்கப்பட்டிருப்பது மிகவும் கவலைக்குரிய விடயமாகும்.

1995 இல் தமிழ் அரசியல் கட்சிகளும், இராணுவ அதிகாரிகளும் சமூர்த்தி ஊழியர்களை நியமிப்பதில் போட்டிபோட்டுக் கொண்டு நேர்முகப் பரீட்சைகளை நடத்தினர். இருந்தபோதிலும், இராணுவ கட்டுப்பாட்டிலுள்ள 39 கிராமசேவையாளர் பிரிவுகளைக் கொண்ட மன்னார் நகரத்தினுள்ளும், நானாட்டான், போன்ற பகுதிகளுக்குக்கூட இந்த வேலை வாய்ப்பு வழங்கப்படாதது பெரும் அநீதியாகும். •

மூதூர் – திருமலை படகுச்சேவை சீரடையுமா!

(திருமலை நிருபர்)

1993.08.25 இல் திருமலையிலிருந்து மூதூர் புறப்பட்ட இயந்திரப்படகு கடலில் மூழ்கி நூற்றுக்கு மேற்பட்ட மனித உயிர்கள் பலியாகியதை எவரும் மறந்திருக்கமாட்டார்கள். அதன் பின்னர் மூதூர் தனியார் துறையினரின் இயந்திரப் படகுகளை சேவையில் ஈடுபடுத்த வேண்டாம் என மக்கள் குரலெழுப்பியதால் அவர்களின் படகுகளை சேவைக்கு விட மாவட்ட அரசாங்க அதிபரால் தடை விதிக்கப்பட்டது.

அதன்பின் போக்குவரத்து சபைக்குரிய படகு மாத்திரம் சேவையில் ஈடுபடுத்தப்பட்டது.

ஆனால், இது பழுதடையும் வேளைகளில் மக்கள் பெரிதும் கஷ்டப்படுகிறார்கள். அவ்வேளைகளில் இவர்கள் கிண்ணியாவுக்கு மீன்பிடி இயந்திரப் படகுகளில் வந்து கிண்ணியாத்துறையைக் கடந்து பஸ் ஏறி திருகோணமலையை அடைவர். இதற்காக ஒருவழிப் பாதைக்கு 50ரூபா அளவு செலவிடவேண்டியுள்ளது.

இந்நிலையில் மூதூர் பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் ஒரு புதிய இயந்திரப் படகை சேவையில் ஈடுபடுத்தியும் நிலைமை சீரடையவில்லை. 1998ம் ஆண்டு மூதூர் ப.நோ.கூ.சங்கம் நியூகோ கம்பனிக்குரிய கப்பலை மூதூர் திருமலை கடல் சேவையில் ஈடுபடுத்தினர்கள். ஒரு வருடம் நடத்தப்பட்ட இக் கப்பல் சேவை பலருக்கும் கப்பம் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருந்தபோது, துறைமுகத்தில் நிறுத்தப்பட்டிருந்த கப்பல் புலிகளினால் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டது.

அதன்பின் ப.நோ.கூ.சங்க படகும் இ.போ.ச. படகும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டாலும் திருப்திகரமான சேவை மக்களுக்குக் கிடைக்கவில்லை.

பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கம் ஆட்சிக்கு வந்த நாள் தொடக்கம் இவ் இயந்திரப் படகுச் சேவையைச் சீர்படுத்தப் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட போதிலும் இன்னும் நடைமுறைக்கு வரவில்லை. அண்மையில் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜனாப். நஜீப், ஜனாப்.ஏ. மஜீத் அவர்களின் அயராத முயற்சியினால் போக்குவரத்து நெடுஞ்சாலை அமைச்சர் ஜனாப்.எம்.எச்.எம். பௌசி அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட வேண்டுகோளை ஏற்றுக்கொண்ட அமைச்சரவை இச்சேவைக்கென ஏழரைக்கோடி ரூபாவை ஒதுக்கியது.

இந்தப் பணத்தைக்கொண்டு கொழும்பில் புதிதாக இயந்திரப் படகொன்று கட்டப்பட்டு அதற்கு "சந்திரிகா" எனப் பெயரிடப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது. போக்குவரத்து அமைச்சர் நாடு திரும்பியதும் இப் புதிய இயந்திரப் படகு இம் மாதக் கடைசியில் சேவையில் ஈடுபடுத்தப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

ஒரு இலட்சத்துக்கும் அதிகமான திருமலை மாவட்ட மக்களின் போக்குவரத்துப் பிரச்சினை மிக விரைவில் தீர்க்கப்படும் என நம்புவதைத் தவிர வேறுவழியில்லை. இந்த நம்பிக்கை நிறைவேறுமானால் அது இடையிலேயே தகர்ந்துபோகும் நிலையைப் புலிகள் ஏற்படுத்தாது இருக்க வேண்டும். •

இருளும் ஒளியும்

(தம்பலகாமம் நிருபர்)

தம்பலகாமம் மின்மாற்றி தகர்க்கப்பட்டதால் பத்தினிபுரம், பாலம்போட்டாறு பகுதிகளுக்கு மின்சாரம் வழங்கப்படாமல் இருக்கிறது. இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படுகிறது. அரசு உரிய நடவடிக்கை எடுத்து இக்குறையை நிவர்த்தி செய்வார்களா என மக்கள் எதிர்பார்க்கின்றனர். தமிழ் மக்களை இருட்டிலேயே வாழவைக்க வேண்டும் என்பதில் புலிகளுக்கு என்னதான் இவ்வளவு அக்கறையோ.

குடிநீர் வழங்கக் கோரல்

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு மண்முனை வடக்கு மாநகர எல்லைக்குட்பட்ட கிராமங்களான புதூர், சேத்துக்குடா, திமிலைத்தீவு, வலையிறவு, வீச்சுக்கல்முனை ஆகிய கிராமத்தைச் சேர்ந்த முப்பதுக்கும் மேற்பட்ட கழகங்கள், சங்கங்கள், சபைகளைச் சேர்ந்தோர் உண்ணாவிரதம், வெகுசனப் போராட்டங்களை முன்னெடுக்க நடவடிக்கை எடுத்துள்ளனர்.

2500க்கும் மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த இம்மக்கள் தமது குடிநீர்ப் பிரச்சினையை முன்வைத்தே தமது போராட்டங்களை முன்னெடுக்க இருப்பதாகத் தெரிகிறது. •

பௌர்ணமி கலை விழா

யாழ் மாநகர சபையினால் நடாத்தப்பட்ட பௌர்ணமி கலைவிழா கடந்த 18.03.2000 அன்று யாழ் வேம்படி மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. பிற்பகல் 2மணிக்கு ஆரம்பமாகிய இந்த விழாவிற்கு யாழ் மாநகர சபை உறுப்பினர் மனுவல் மங்களநேசன் தலைமை வகித்தார் நாதஸ்வர வித்துவான் பி.எஸ். பிச்சையப்பா குழுவினரின் நாதஸ்வர இசையுடன் நிகழ்ச்சி ஆரம்பமாகியது. மங்கள விளக்கினை யாழ் பல்கலைக் கழக துணைவேந்தர் பொ. பாலசுந்தரம் பிள்ளை ஏற்றிவைத்தார். யாழ். பல்கலைக்கழக பதிவாளர் க. குணராசா, வலம்புரி ஆசிரியர் கோ. சி. வேலாயுதம், யாழ் அரச அதிபர் க. சண்முகநாதன் ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். யாழ் மாநகர சபையின் செயலாளர் எஸ்.எம். பொன்னம்பலம் வரவேற்பு நிகழ்த்தினார்.

இந்த விழாவில் கலைஞர்களான பி.எஸ். பிச்சையப்பா நவாலியூர். என். செல்லத்துரை, இரா. செல்வவடிவேல் ஆகியோர் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டனர் அதனைத் தொடர்ந்து இரவு 8.30 மணிவரை கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. •

கல்முனை தமிழ் பிரிவைத் தரமுயர்த்துக!

கல்முனை தமிழ் பகுதி மேலதிக பிரதேச செயலகத்தை தரமுயர்த்தக்கோரி கடந்தமாதம் பொது அமைப்புக்கள், பொதுமக்களால் அடையாள உண்ணாவிரதம் மேற்கொள்ளப்பட்டது.

12-04-1989 இல் மேலதிக பிரதேச செயலகமாக ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து கடந்த 11வருடமாக இச் செயலகத்தை தரமுயர்த்தக் கோரிக்கைகள் விடப்பட்டே வந்துள்ளது. 28-07-1993 இல் அமைச்சரவைத் தீர்மானங்கள் எடுக்கப்பட்டபோதிலும் அது அமுலுக்கு வராததின் காரணம் அரசியல் தலையீடுதான் என்றே கருதப்படுகிறது.

கல்முனை தமிழ் பகுதி பிரதேச செயலகத்தை தரமுயர்த்தக் கோரியதுடன் இதற்குத் தடையாகவுள்ள மறைமுகமான அரசியல் தலையீட்டைக் கண்டித்துமே இவ் அகிசைப் போராட்டம் நடைபெற்றிருந்தது.

சுமார் 6722 குடும்பங்களையும் 30,000 சனத்தொகையையும் கொண்ட கல்முனை தமிழ் பகுதியைக் காட்டிலும் குறைவான சனத்தொகையைக் கொண்ட சாய்ந்தமருது இரண்டு மாதங்களுக்கு முன்பே பிரதேச செயலகமாகத் தரமுயர்த்தப்பட்டதையும் உண்ணாவிரதிகள் சம்பந்தப்பட்ட அமைச்சர் கௌரவ ரத்னசிறி விக்ரமநாயக்கா அவர்களின் கவனத்துக்குக் கொண்டுவந்துள்ளனர்.

ஏற்கனவே 1689 குடும்பங்களைக் கொண்ட லவுகல பிரதேசமும், 2386 குடும்பங்களைக் கொண்ட இறக்காமம் பிரதேசமும், 4104 குடும்பங்களைக் கொண்ட மகாஓயா பிரதேசமும் பிரதேச செயலகமாகத் தரமுயர்த்தப்பட்டிருப்பதையும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

சுமார் 1500க்கும் மேற்பட்ட பொதுமக்களும், பொதுசன அமைப்புக்களும் கலந்துகொண்ட இவ் உண்ணாவிரதப் போராட்டத்தை அம்பாறை மாவட்ட தமிழர் மகாசபை ஒழுங்கு செய்திருந்தது. •

மானிய உதவி

மட்டக்களப்பு பகுதியிலுள்ள கல்லடி, வேளாங்கண்ணிபுரம் போன்ற பிரிவுகளிலுள்ள மக்களின் 90 காணிகளுக்கு உத்தரவுப் பத்திரம் (பெர்மிட்) வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக ஈ.பி.ஆர்.எல்.எப் பிரதேசப் பொறுப்பாளர் திரு.க. இராமச்சந்திரன் (சந்திரன்) தெரிவித்தார்.

சுமார் 160க்கு மேற்பட்ட குடும்பங்கள் உள்ள இப்பகுதிகளின் மீதமான காணிகளுக்கும் காணிக்கச்சேரி நடாத்தி பெர்மிட் வழங்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கடன், மானிய அடிப்படையில் வீடு, கிணறு, மலசல கூடங்கள் என்பன அமைக்கவும் தெருக்களைப் புனருத்தாரணம் செய்யவும் மேலும் அவர் கோரியுள்ளார்.

மொட்டைத் தலையும் முத்தமும்

இந்தியாவின் புகழ் பெற்ற நடிகை சபானா அஸ்மி சில வருடங்களுக்கு முன் தென்னாபிரிக்க ஜனாதிபதி நெல்சன் மண்டேலாவைச் சந்தித்தார். இருவரும் முத்தத்தைப் பரிமாறிக் கொண்டனர்.

இதற்கு ஆட்சேபனை தெரிவித்து இந்தியாவில் சில இஸ்லாமிய அடிப்படைவாத அமைப்புக்கள் இஸ்லாமிய ஒழுக்கங்களுக்கு முரணானது எனக் கூக்குரல் எழுப்பின.

தற்போது "வாட்டர்" திரைப்படத்துக்காக மொட்டை போட்டுக்கொண்டார். அவருக்கு மொட்டை போட்ட சிகையலங்கரிப்பாளர் இப்போது இந்து தீவிரவாதிகளால் மிரட்டப்பட்டுள்ளார். வாரணாசியில் 1930 களில் வாழ்ந்த விதவைப் பெண்கள் இந்து தர்மங்களின் பேரால் அனுபவித்த துன்பங்களை கேள்விக்குள்ளாக்கியதே. இப் படத்தின் கருப்பொருள். எனவே இந்து அடிப்படை வாதிகளின் கோபத்துக்கு சிகையலங்கரிப்பாளரும் இலக்காகியுள்ளார். •

மாடசாலைக்குப் புதிய காணி

மட்டக்களப்பு விமான நிலைய விஸ்தரிப்பு சுவீகரிப்புக்கு எதிராக மக்கள் ஆர்ப்பாட்டம் நடத்தியதும் பாடசாலை, கோவில்கள் இயங்குவதற்கும் மக்கள் சுடலையைப் பயன்படுத்துவதற்கும் மீண்டும் விமானப்படை அதிகாரியினால் அனுமதி வழங்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

இச் சுவீகரிப்பு எல்லைக்குட்பட்டிருந்த பாடசாலையை இடம் மாற்றக் காணிகொள்வனவு செய்யவும், கட்டிடங்களைக் கட்டுவதற்கு ஒதுக்கீடுகளைச் செய்யுமாறும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை ஈ.பி.ஆர்.எல்.எப் தேசிய அமைப்பாளர் திரு. இரா. துரைரெட்ணம் அவர்கள் கேட்டுள்ளார்.

இப் பாடசாலையானது விமானப் படைத்தள சுவீகரிப்புக்கு உட்பட்டிருந்ததால் இயல்பாகவே நடந்திருக்க வேண்டிய பாடசாலை அபிவிருத்திப் பணிகள் தடைப்பட்டிருந்தன குறிப்பிடத்தக்கது. •

இராணுவ வீராங்கனை அனோமாவின் புதைகுழியும், செம்மணி புதைகுழிகளும்

நாகமையைச் சேர்ந்த பெண்ணொருவர் (இராணுவவீராங்கணை) இவரைக் கோடீஸ்வர கயவன் ஒருவன் கொலைசெய்து கொல்லைப் புறத்தில் புதைத்ததிற்காக, அண்டை அயலிலுள்ள மக்கள் சுமார் 3500க்குமேல் திரண்டெழுந்து அவரின் வீட்டை எரித்ததோடு மாத்திரமல்லாமல் அந்த கோடீஸ்வர வர்த்தகருக்காக நீதிமன்றத்தில் சட்டத்தரணிகள் எவரும் ஆஜராகவும் செய்ய விடாது தடுத்தனர்.

ஆனால், செம்மணியில் படுகொலை புரிந்து புதைகுழிகளை உருவாக்கியவர்களுக்கு ஆஜராகுவதற்குச் சிங்களச் சட்டத்தரணிகள் வவுனியாவுக்கும், யாழ்ப்பாணத்துக்கும் விழுந்தடித்து ஓடுகிறார்கள்.

இங்கே மனிதாபிமானமும் இனவாதம் கலந்ததுதான். மற்றப்படி காட்டுமிராண்டித் தனமும் ஈவிரக்கமற்றதுதான் போலும். •

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலையடி வேம்பு எல்லை இழுபறி அரசியல் பலவந்தமா!

அம்பாறை மாவட்டத்தில் ஆலையடிவேம்பு கருங்கொடித்தீவு என்ற இரு பிரதேசசெயலகப் பிரிவுகளின் எல்லைகள் தொடர்பான சர்ச்சைகள், இழுபறிகள் கடந்த பத்து வருடங்களுக்கும் மேலாகவே தொடர்ந்த வண்ணம் உள்ளது.



அனுமார் வாலாக நீழும் இந்தப் பிரச்சினைகளின் உண்மையான தோற்றமும், இந்த சர்ச்சைகள் தொடர்பான காரணங்கள் என்ன என்பது பற்றியும் சற்று விரிவாகப் பார்க்க வேண்டியது அவசியமாகிறது.

தமிழ்-முஸ்லிம் சமூகங்களைப் பாரம்பரியமாகக் கொண்ட பிரதேசமான அக்கரைப்பற்று என்பது "கருங்கொடித்தீவு" எனவும் மற்றொரு பெயரில் அழைக்கப்பட்டும், அரச ஆவணங்களில் உத்தியோகபூர்வமாகப் பதியப்பட்டும் வந்துள்ளது.

இவ்விரு சமூகங்களையும் உள்ளடக்கியதாக "அக்கரைப்பற்று மத்திய கிராம சபை" இன் ஆழுமைக்குட்பட்டிருந்த இப்பிரதேசமானது 1988 இல் முன்னாள் பொத்துவில் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திருமதி ரங்கநாயகி பத்மநாதன் அவர்கள் காலத்தில் இரு பிரதேச செயலகப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது. செயலகப் பிரிவுகள் இரு பெயர்களில் அழைக்கப்படவேண்டியிருந்ததால் கருங்கொடித்தீவு, ஆலையடிவேம்பு என இரு பகுதிகளும் பெயரிடப்பட்டன. (ஆலையடிவேம்பு என்பது தமிழ் பகுதியைச் சேர்ந்த ஒரு கிராமத்தின் பெயராகும்.)

அக்காலகட்டத்தில் இவ்விரு பிரதேச செயலகங்களும் பிரிக்கப்படும்போது இவற்றிற்குரிய எல்லைகளும் பிரிக்கப்பட்டிருந்தன. இதன்பிரகாரம், இரு சமூகங்களும் தொன்றுதொட்டு வாழும் இருப்பிடங்கள் அவர்களுக்குரியதாகவே இனங்காணப்பட்டிருந்தது. அதாவது, ஒன்று முதல் ஆறு குறுச்சிக்கள் வரை முஸ்லிம் மக்கள் பாரம்பரியமாக வாழ்ந்துவந்த பிரதேச நிலப்பரப்பு "கருங்கொடித்தீவு" பிரதேச செயலகப் பிரிவாக முஸ்லிம் மக்களுக்கும்,கோளாவில், பனங்காடு போன்ற தமிழ் கிராமங்களை உள்ளடக்கியதாக, ஏழு முதல் ஒன்பது வரையான தமிழ் மக்கள் பாரம்பரியமாக வாழ்ந்து வந்த குறிச்சிக்களைக் கொண்ட நிலப்பரப்பு "ஆலையடிவேம்பு" பிரதேச செயலகப்பிரிவாக தமிழ் மக்களுக்கும் வரையறுக்கப்பட்டிருந்தது.

இதில், பழைய பஸ்நிலையமான இடமானது காரைதீவைச் சேர்ந்த ஒரு தமிழ்ப் பெண்ணுக்குச் சொந்தமானதாகவும், தமிழ்ப் பிரதேசமான 8ம் குறிச்சியைச் சேர்ந்திருந்தும் அது தொடர்பான சர்ச்சை எழுந்தபோது அவ்விடமானது தற்காலிகமாக அரசாங்க அதிபரின் மேற்பார்வையில் பொதுவானதாக இருப்பதாகவும் இரு பகுதியினராலும் உடன்பாடும் காணப்பட்டது. (தற்போது அவ்விடமானது ஒருதலைப்பட்சமாக முஸ்லிம் வியாபாரிகளால் ஆக்கிரமிக்கப்பட்டும் உள்ளது.)

> 1. எல்லைகள் தெளிவாக வரையறுக்கப்படவில்லை எனவும்,
> 2. முஸ்லிம் சமூகத்துக்குத் தெரியாமல் இரவோடு இரவாகப் பிரிக்கப்பட்டது எனவும் பரவலாகக் குற்றச்சாட்டுக்கள் தலைகாட்டத் தொடங்கின.

பின்னர், அம்பாறை மாவட்டத்தில் தமிழ் மக்களுக்கான பாராளுமன்றப் பிரதிநிதித்துவம் இல்லாதுபோயிருந்த 1994க்குப் பிந்தைய காலகட்டத்தில் இப்பிரச்சினை கூர்மையடையத் தொடங்கியது.

1. எல்லைகள் தெளிவாக வரையறுக்கப்படவில்லை எனவும்,

2. முஸ்லிம் சமூகத்துக்குத் தெரியாமல் இரவோடு இரவாகப் பிரிக்கப்பட்டது எனவும் பரவலாகக் குற்றச்சாட்டுக்கள் தலைகாட்டத் தொடங்கின.

இதன் விளைவாக ஏலவே, குறிச்சிக்கள் ரீதியாகப் பிரிக்கப்பட்டிருந்த பிரதேசப் பகுதிகளை உள்ளடக்கிய ஆவணங்கள் ஆலையடிவேம்பு பிரதேசசெயலகத்துக்குக் கையளிக்கப்படாமலும் இதனால், ஆலையடிவேம்பு பிரதேச மக்கள் தங்களது காணி சம்பந்தமான பிரச்சினைகளைக் கையாள முடியாமலும் தமது "ஜெயபூமி" உறுதிகளைப் பெற்றுக்கொள்வதில் தாமதங்களும் உருவாகத் தொடங்கின.

உண்மையில், 1988-1990 அளவில் இப்பிரதேச செயலகங்கள் பிரிக்கப்படும்போது தமிழ் மக்களின் பிரதிநிதியாக பாராளுமன்ற உறுப்பினர் திருமதி ரங்கநாயகி பத்மநாதன் அவர்கள் மட்டுமே இருந்தார். ஆனால், அப்போது முஸ்லிம் சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்குப் பல பாராளுமன்ற உறுப்பினர்கள் இருந்தனர்.

சொந்த ஊரிலேயே பாராளுமன்ற உறுப்பினர் ஜனாப்.எம்.ஐ. உதுமாலெப்பை அவர்கள் இருந்தார். என்பது மட்டுமல்லாது மாவட்டரீதியாகப் பல அமைச்சர்களும் இருந்தனர். வர்த்தக கப்பல்துறை அமைச்சராக ஜனாப்.எ. ஆர். மன்சூர் அவர்களும், பிரதித் தபால் தொலைத்தொடர்பு அமைச்சராக ஜனாப்.எம்.எ. மஜித் அவர்களும் இருந்தனர். அத்துடன் நாடளாவிய ரீதியிலும் முஸ்லிம் அமைச்சர்களும் இருந்துள்ளனர். போக்குவரத்து அமைச்சராக ஜனாப் எம்.எச். முகம்மது அவர்களும், வெளிவிவகார அமைச்சராக ஜனாப்.எ.சி.எஸ். ஹமீது அவர்களும் கூட பொறுப்புவாய்ந்த முஸ்லிம் பிரதிநிதிகளாக இருந்துள்ளனர். என்பது மறைக்கவோ மறுக்கவோ முடியாத உண்மை.

அப்போது உள்ளூராட்சி வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சராக இருந்த திரு.ஆர். பிரேமதாச "அவர்கள் இருபக்கத்தைச் சேர்ந்த சமூகப்பிரதிநிதிகளின்தும் வாதப்பிரதிவாதங்களையும் நன்கு கவனத்தில் கொண்டே இதற்கான ஆணையை 28.01.1988 திகதிய வர்த்தமானி (இல:490) மூலம் வழங்கியிருந்தார் என்பதும் உண்மையே.

இவ்விதம் இருக்கையில், இரவோடு இரவாக இருகூறுகளாக்கப்பட்டது என்னும் அபிப்பிராயத்தை ஏற்றுக்கொள்வது பொருத்தமானதுதானா!.

இலங்கையானது பிரித்தானியர் காலத்தில் மாகாணங்களாகவும், வன்னிமைப் பிரதேசங்களாகவும், பற்றுக்களாகவும், பற்றுக்களைக் குறிச்சிகளாகவும் பிரித்து நிர்வகிக்கப்பட்டிருந்தது என்பது கண்கூடு. காலத்தின் தேவை என்பது சமூகங்களை உள்ளடக்கிய ஆகச்சிறிய பிரிவுகளின் அடிப்படையில் பிரிக்கப்படுவது என்பது வழமையானதும் நியாயமானதும் ஒன்று. உலகில் எந்தவொரு பாரிய இடப்பிரிவுகள் கூட அடிப்படை வாழ்விடங்களை நிர்ணயிக்கும் சிறிய அலகுகளை வைத்தே வரையறுக்கப்பட்டு உருவாகும்.

இங்கும் அவ்விதமே, எந்தவொரு சமூகத்தினதும் ஒரு குடும்பம்கூடப் பாதிக்கப்படாத நிலையில் அவர்களது வாழ்விடம் பரம்பலுக்கு ஊறுவிளை விக்கப்படாத வகையில் மிக நுணுக்கமாகவே பிரிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் எல்லையை ஊடறுத்திருந்த தமிழ் மக்களின் இரு ஆலயங்களான பத்திரகாளியம்மன் ஆலயமும், மருதயடி மாணிக்கப் பிள்ளையார் ஆலயமும் தமிழ் பிரிவான 8ம் குறிச்சியிலும் முஸ்லிம் மக்களின் பெரியபள்ளிவாசலானது அவர்களது பிரிவான 6ம் குறிச்சியிலும் இயல்பாகவே

–வயலூரான்–

அமையவும் பெற்றுள்ளது. என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், மிகச்சிறிய இட அலகான குறிச்சிக்களை வைத்து இப்பிரதேச எல்லைகள் பிரிக்கப்பட்டது என்பது அநீதிக்குரிய செயலாகக் கொள்வது பொருத்தமானதுதானா!.

(இக்கட்டுரை பற்றிய பதில் விமர்சனம் பிரசுரிக்கப்படும்)

ஒளிமயமான எதிர்கா.....

12ம் பக்கம் தொடர்ச்சி

நோர்வேயின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்படும் பேச்சுவார்த்தை முயற்சிகளையும்கூட இவர்கள் நிராகரிக்கிறார்கள். ஆனால் பரிதாபத்துக்குரிய நகைச்சுவை என்னவென்றால் இராணுவத்திற்குப் புதிதாக ஆட்களைத் திரட்டும் தளபதிகளின் கோரிக்கைகளுக்கு மிக மிக குறைவான பிரதிபலிப்பே காணப்படுகிறது.

ஆனால் இதுபற்றியெல்லாம் இவர்கள் மூச்சுக்கூட விடுவதில்லை. இப்போது பேச்சு வார்த்தைக்கான சூழ்நிலையை எவ்வாறு சீர் குலைக்கலாம். எவ்வாறு இனவாத தீயைப் பரவச்செய்யலாம். அவ்வாறு பரவும் போது சிறுபான்மைச் சமூகத்தவரை எவ்வாறு சூறையாடலாம். என்று காத்திருக்கும் சமூகவிரோதச் சக்திகளே பயங்கரவாத எதிர்ப்பு முன்னணியிலும். சிங்கள வீரவிதானவிலும் அதிகமாகக் காணப்படுகின்றனர்.

சிங்கள மக்களின் நலன் சார்ந்த சித்தாந்தங்கள் எதுவுமில்லை. அவ்வாறு ஏதும் கூறப்படுமானால் அது பெரும் மோசடியாகத்தான் இருக்க முடியும்.

குண்டுவெடிப்புகளும் குடாநாட்டுச் சண்டைகளும்

அடுத்து கொழும்புக்கு பரவியிருக்கும் சண்டைகளும், யாழ் குடாநாட்டின் வடமராட்சி, பச்சிலைப்பள்ளிப் பகுதிகளில் தொடர்ச்சியாக இல்லாமல் இடையிடை நடைபெறும் போர்களும் கவனத்திற்குரியவை.

இந்தச் சூழ்நிலை தெற்கிலும் சரி, வடக்கிலும் சரி மரண பீதியை அதிகரிக்கச் செய்துள்ளன. பாதுகாப்பான வாழ்க்கை உத்தரவாதமில்லாத நிலை எங்கும் காணப்படுகிறது.

யுத்தம் புரிவதிலான திடசங்கற்பங்கள் இரு பக்கத்திலும் வெளிப்படுத்தப்பட்டாலும் அவை பிரச்சினையைத் தீர்ப்பதில் எவ்விதத்திலும் உதவப் போவதில்லை. மக்களின் வாழ்க்கை நிலை மேலும் மேலும் மோசமடையலாம்

அண்மையில் ஆனையிறவு, பளைப் பகுதியில் ஏற்பட்ட மோதல்களில் இடையில் அகப்பட்டுக்கொண்ட [illegible] நிர்க்கதி நிலைக்கு உள்ளானார்கள்.

என்பது எமக்கெல்லாம் அனுபவரீதியான ஒரு விடயமும் கூட உணவில்லாமல், மருந்தில்லாமல் சில ஆயிரக்கணக்கான மக்கள் மரணத்தின் பிடியில் சிக்கியிருந்தது பயங்கரமான அனுபவமே.

இதே போன்ற நிலைமைகள் தற்போது அதிகரித்துக் காணப்படுகின்றன. ஜனாதிபதித் தேர்தலுக்கு முன் வவுனியா நகரத்தில் ஏற்படுத்தப்பட்ட இடப்பெயர்வுகள், தொடர்ந்து யாழ்குடாநாட்டு பச்சிலைப்பள்ளியில் ஏற்பட்ட இடப்பெயர்வுகள் நிச்சயமற்ற வாழ்க்கை நிலையை அதிகரிக்கச் செய்வதையே உறுதிப்படுத்துகின்றன.

1995ல் யாழ்குடாநாட்டில் வலிகாமத்திலிருந்து தென்மாராட்சியை நோக்கி இடம்பெயர்ந்த மக்கள் தற்போது தென்மாராட்சி பச்சிலைப்பள்ளிக்கும், வலிகாமத்திற்குமிடையே இடம் பெயர்வது அன்றாட நாளாந்த நிகழ்வாகிவிட்டது.

இதேபோலத்தான் வடமாராட்சியிலும் இயல்பு வாழ்க்கை ஸ்தாபிக்கப்பட்டது என்று சொல்லப்பட்ட இடங்களில் நிச்சயமற்ற வாழ்க்கை நிலை. இதே போல் வவுனியாவிலும், மன்னாரிலும், அரச கட்டுப்பாடு இல்லாத வன்னிப் பகுதியிலும் மக்கள் இந்தியாவுக்கு இடம் பெயர்வற்கான நிலவரங்கள் தோன்றியுள்ளன.

மக்கள் தமது வாழ்விடங்களில் நம்பிக்கையுடன் உட்கார்வதற்கான நிலைமைகள் மிக மோசமாகக் குறைந்து வருகின்றன. பாதுகாப்பின்மை, வறுமை என்பன அதிகரித்து விட்டன. நிலைமை இப்படியே தொடர்ந்தால் இன்னும் நான்கு ஐந்து வருடங்களின் பின் வடகிழக்கில் தமிழர்களின் வாழ்விடம் எப்படி இருக்கும் என நினைத்துப் பார்க்க முடியாது.

நகரங்களில்.....

12ம் பக்கம் தொடர்ச்சி

கள் குடும்ப பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்கக் கஸ்டப்படுகிறார்கள்.

இவர்கள் தொடர்ந்து இந்தத் தொழிலையே செய்யமுடியாத நிலையும் உண்டு. இவர்களுக்குத் திருமணம் போன்ற நிகழ்வுகள் நடைபெறுவதை உத்தரவாதப்படுத்தினால், அதுவும் ஐந்து வருடங்களுக்கு மேல் வேலை செய்திருந்தால் மட்டுமே அவர்களுடைய ஊழியர் சேமலாப நிதியிலிருந்து ஒரு தொகைப் பணத்தைக் கடனாகப் பெற்றுக்கொள்ள முடியும். ஒரு குறிப்பிட்ட காலம் மட்டும் வேலை செய்துவிட்டு வேலையிலிருந்து ஒதுங்கிக்கொள்ளும் யுவதிகளுக்குத் தங்கள் ஊதியத்திலிருந்து பிடிக்கப்படும் ஊழியர் சேமிப்பு பணமோ கிடைக்காது.

இவர்களில் சிலர் தற்போது உள்ள பயங்கரவாதப் பிரச்சினைகளினால் பொலிஸ் சோதனையின் போது அடையாள அட்டை, பொலிஸ்பதிவு, கிராமசேவகரின் அத்தாட்சிப்படுத்தும் கடிதம் போன்ற ஆவணங்கள் இல்லாததினால் பொலிசாரின் நடவடிக்கைகளுக்கும் முகம் கொடுக்க வேண்டியுள்ளது.

இந்தப் பிரச்சினைகளுக்கெல்லாம் ஓர் தீர்வு காணவேண்டிய அவசியம் அரசுக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் உண்டு. மலையகத்தில் தேயிலைத் தொழிலை நம்பியிருக்காதவாறு கைத்தொழிற்சாலைகள் அமைத்து அவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படல் வேண்டும்.

சிறு கைத்தொழில்களை உருவாக்கி ஊக்குவித்தலும், சுய வேலைவாய்ப்புக்களுக்காக கடனுதவி மானியங்கள் வழங்கி உற்பத்திப்பொருட்களுக்கு மூலப் பொருட்கள் கிடைக்கவும், அதை சந்தைப்படுத்த ஏற்ற வசதிகளைச் செய்யவும் நடவடிக்கைகள் எடுப்பதன் மூலம் முழுமையான தீர்வு கிடைக்காவிட்டாலும் ஓரளவு நன்மையாவது கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலிகள் ஒத்துழைத்தால் பொதுமக்களும் பொது நிறுவனங்களும் யாழ்ப்பாணம்–வவுனியா புகையிரத வீதியையும் புனரமைக்கும் படி செய்ய அரசாங்கத்தை வற்புறுத்த முடியும். அது யாழ் மக்களுக்கு பெரும் பயனைத்தரமுடியும். புலிகளுக்கு யார் இதைப் புரியவைப்பார்? புரியவைக்க வேண்டியது காலத்தின் அவசியமாகும். இது மக்களின் தேவை! எனவே இது மக்களின் கடமை.!!

வவுனியா - யாழ்ப்பாணம் வீதியை புலிகள் திறக்க வேண்டும்

ராஜபண்டிதர்

ஐந்து இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் வாழும் யாழ்ப்பாணக் குடாநாடு கடந்த பத்து ஆண்டுகளுக்கு மேலாகப் போக்குவரத்து ரீதியாகப் பார்த்தால் நாலு புறமும் பெருங் கடலால் சூழப்பட்ட ஒரு தீவு போல் ஆகிவிட்டது.

யாழ்ப்பாண மக்கள் இலங்கையின் ஏனைய இடங்களுக்குப் பயணம் செய்வதாக இருந்தாலும் சரி, ஏனைய இடங்களிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு உள்ளே போவதானாலும் சரி அது இலகுவான காரியமல்ல. பெரும் பணச் செலவு, காலவிரயம், உடலலுப்பு, பரிசோதனைகள் எனப்பல. மக்கள் போக்குவரத்து செய்வது மட்டுமல்ல பொருட்கள் கொண்டு வரப்படுவதிலும் கொண்டு செல்லப்படுவதிலும் அதுவே நிலைமை.

இங்கு பெருந்துன்பங்களுக்கும், நஷ்டங்களுக்கும் உள்ளாகுபவர்கள் யாழ்ப்பாணத்து மக்களே.

யாழ்ப்பாணத்தில் பழவகைகளும், மரக்கறிவகைகளும் விற்க வழியில்லாமல் மிகவும் மலிந்து போயுள்ளன. வாழைப்பழங்களும், கத்தரிக்காயும் மற்றும் மரக்கறி வகைகள் சிலவும் மாட்டுத்தீவனமாக ஆகியிருக்கும் நிலைமை உலகில் யாழ்ப்பாணத்துக்கு மட்டுமே ஏற்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம்-வவுனியா வீதியை மக்களின் பாவனைக்காக குடியியல் தேவைகளுக்காகப் பயன்படுத்திக் கொள்வதில் ஏன் தடை? யாரால் அத்தடை? அத்தடைகளை நீக்கவழி என்ன?

ஒரு காலத்தில் யாழ்ப்பாணத்திலிருந்து மிளகாய், வெங்காயம், புகையிலை, வாழைப்பழம் மட்டுமல்ல, பூசணிக்காய், மாம்பழம், திராட்சைப்பழம், கிழங்கு வகைகள் எனப்பல்வேறு விவசாய விலைபொருட்கள் கொழும்புக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. யாழ்ப்பாணத்து விவசாயிகள் பெரும் நன்மை அடைந்தனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து பெருந்தொகையில் மீன், கருவாடு, இறால் என்பன கொழும்புச் சந்தைக்கு ஏற்றுமதியாகின. இதனால் யாழ்ப்பாணத்தின் கரையோரப்பகுதிகளில் செழிப்பான செல்வந்தர்கள் பலர் இருந்தார்கள். ஆனால் இன்று கரையிலே வலைபோட்டு, தூண்டில் போட்டு மீன்பிடிப்பதைத்தவிர வேறு வகையில் பாரிய அளவில் மீன்பிடிப்பதற்கு அரசின் இராணுவம் அனுமதிக்கிறதில்லை. அப்படியிருந்தும் யாழ்ப்பாணத்தில் மீனின் விலை கொழும்புச் சந்தைவிலையை விட மிகக்குறைவே உள்ளது.

அரசாங்கம் கட்டுப்பாட்டின்றி மீன் பிடிக்க அனுமதித்தாலும் கூட பிடிக்கப்படும் மீன்களை அவர்கள் எங்கே எப்படி உரிய விலைக்கு சந்தைப்படுத்துவார்கள் என்பது கேள்விக்குறியே. சந்தைப்படுத்த முடியாத நிலையில் மரக்கறிகளை மாட்டுத்தீவனமாவது பாவிக்கலாம். ஆனால் மீனைப் போட்டு மனிதனுக்கு பயனுடைய எந்த மிருகங்களை வளர்க்க முடியும்.

இரண்டு லொறிச் சாமானை ஒரு தடவையில் அள்ளி ஏற்றிச் செல்ல முடியாத அதுவும் கிலோவுக்கு 50 ரூபா கட்டணம் பெறும் விமானப் போக்குவரத்தை நம்பியோ அல்லது அடிக்கு ஒரு தடவை அமாவாசைக்கு ஒரு தடவை எனப் பயணம் செய்யும் யாழ்ப்பாணம்-திருமலை கப்பற்போக்குவரத்தை நம்பியோ யாழ்ப்பாண மீனவர்களும் விவசாயிகளும் தமது பொருளாதார நடவடிக்கைகளை விரிவுபடுத்தவோ துரிதப்படுத்தவோ முடியாது.

யாழ்ப்பாணத்தில் அன்றாடப்பாவனைப் பொருட்கள் ஒவ்வொன்றும் கொழும்பின் நிலையோடு ஏன் வவுனியாவோடு ஒப்பிடுகின்றபோது ஒவ்வொன்றும் 30சத வீதத்துக்கும் அதிகமான விலையில் விற்கப்படுவதாக யாழ் மக்கள் வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொள்கின்றனர். இதுவும் தரைவழியான போக்குவரத்தின்மையின் விளைவே.

யாழ்ப்பாணத்தின் வேலைவாய்ப்புக்கள் போதியளவில் இல்லை. யாழ்ப்பாணத்துக்கும் வவுனியாவுக்கும் இடையில் இலகுவான தரைவழிப் போக்குவரத்து ஏற்படும் பட்சத்திலேயே யாழ்ப்பாணத்திலிருந்து உற்பத்திப்பொருட்கள் வெளியே கொண்டுவரப்பட்டு கூடியவிலைக்கு விற்பதாலும், யாழ்ப்பாணத்துக்கு உள்ளே கொண்டு செல்லப்படும் பொருட்கள் ஒப்பீட்டு ரீதியில் மலிவான விலையில் கிடைக்கவும் ஏற்படும்.

யாழ்ப்பாணத்தில் சீமெந்து மற்றும் கட்டிடப்பொருட்கள் நியாயமான விலையில் கிடைக்குமானால், தனியார்கள் தமது வீடுகள் மற்றும் வர்த்தக கட்டிடங்களை புனரமைப்பதில் தீவிரமாக ஈடுபடுவார்கள். கட்டிடப் பொருட்களைப் பெருமளவில் யாழ்ப்பாணத்திற்கு கொண்டு வருவதற்குத் தடையில்லாத நிலை இருக்குமானால் அரசாங்க கட்டிடங்கள் அனைத்தும் பாடசாலைகள் வைத்தியசாலைகள் உட்பட அனைத்தும் புனர்நிர்மாணம் செய்யப்படும் நிலைமை தீவிரமடையும்.

இவையெல்லாம் யாழ்ப்பாணத்தில் ஒரு பொருளாதார எழுச்சிக்கு அடித்தளமிடும். இப்போது நிலவும் வேலை இல்லாமை இல்லாதொழியும். இப்போது நிலவும் கேவலமான கையேந்திவாழும் நிலைமை முடிவுக்குவரும்.

யாழ்ப்பாணம்-வவுனியா வீதியை மக்களின் பாவனைக்காக குடியியல் தேவைகளுக்காகப் பயன்படுத்திக்கொள்வதில் ஏன் தடை? யாரால் அத்தடை? அத்தடைகளை நீக்கவழி என்ன?

இதில் அரசுப்படைகள், புலிகள் இரண்டுபேருமே காரணம். புலிகள் வழியை மக்கள் தடையின்றிப் பாவிப்பதற்கு ஒத்துக்கொள்வார்களேயானால் ஒத்துழைப்பார்களேயானால் அதற்காக அரசாங்கத்தை ஒத்துக்கொள்ள வைப்பது சிரமமாக இருக்கமுடியாது.

இராணுவத்தினரோ புலிகளோ ஆயுதமோதலில் ஈடுபட்டிருக்கும் எவரும் இப்போக்குவரத்தைப் பயன்படுத்த முடியாது எனவும் ஏற்பாட்டை ஏற்படுத்த முடியும்.

வீதிகளின் பாவனைகளைத் தடைசெய்வதன் மூலம் விடுதலையைப் பெற்றுக்கொள்ளலாம் என நினைப்பது பொருத்தமற்ற விவாதமாகும்.

சொந்த மக்களின் துன்பத்தில் சுதந்திரம் பெறமுடியாது. இவற்றைப் புலிகள் புரிந்து கொள்ள வேண்டும்.

புலிகள் ஒத்துழைத்தால் பொதுமக்களும் பொது நிறுவனங்களும் யாழ்ப்பாணம்-வவுனியா புகையிரத வீதியையும் புனரமைக்கும் படி செய்ய அரசாங்கத்தை வற்புறுத்த முடியும். அது யாழ் மக்களுக்கு பெரும் பயனைத் தரமுடியும்.

புலிகளுக்கு யார் இதைப் புரியவைப்பார்? புரியவைக்க வேண்டியது காலத்தின் அவசியமாகும். இது மக்களின் தேவை! எனவே இது மக்களின் கடமை.!!

திரை

"ஹே ராம்" ஜெய ஹே கமல் ராம்

மாமூல் நிறைந்த தமிழ்த் திரையுலகில் கமலின் பரிசோதனை முத்திரை

வரலாற்றின் ஒவ்வொரு கால கட்டமும் கடந்து போகையில் வெவ்வேறு வியாக்கியானங்களுக்கு உட்படுத்தப்படுகின்றன. "ஹே ராம்" திரைப்படமும் 1940களில் இந்திய உபகண்டத்தில் பரவிய இனவெறி நோயைப் பற்றிய அவ்வாறானதொரு வெளிப்பாடேயாகும்.

திரையுலகில் நடிப்பிலும், இயக்குவதிலும், தயாரிப்பதிலும், துணிச்சலையும், தனித்துவத்தையும் கொண்ட கமலஹாசன் இந்திய - பாகிஸ்தான் சுதந்திரத்தின் போது பெரும் அதிர்வையும், அழிவுகளையும் ஏற்படுத்திய இனவெறிக் கலவர நாட்களை திரைக் கதையின் மூலக் கருவாக எடுத்துப் பாராட்டுக்குரிய திரைப்படமாக ஜோடித்துள்ளார்.

இப் படத்தை நிறைந்த [illegible] பிரதான பாத்திரத்தின் காதலும் வாழ்க்கையும் வரலாற்றின் உடைந்து போன பாகங்களை உணர்ச்சிப் பூர்வமாக இணைத்ததாக அமைந்துள்ளது.

பெருமையோடு மரணிக்க வேண்டும் என விரும்பும் சகேத் ராம் (கமல்ஹாசன்) என்பவரின் உணர்வு நீரோட்டத்தை அவரது நண்பரான அம்ஜத் (சாருக்கான்) என்பவருடன் உறவு படுத்தும் கருவைப் பின்னிப் பிணைந்ததுதான் இப்படக்கதையின் வெளிப்பாடு.

சாகேத் ராமும் அம்ஜத்தும் மொஹஞ்சதாரோ அகழ்விடங்களில் கடமை புரிபவர்கள். அம்ஜத் பலுச்சிஸ்தானைச் (இப்போது பாகிஸ்தானின் ஒரு பகுதி) சேர்ந்த ஒரு பட்டாணியாவார். சாகேத்ராம் தமிழ் நாட்டைக் [illegible] சேர்ந்த [illegible] பிராமணக் குடும்பத்தைச் சேர்ந்தவர்.

உப கண்டத்தை இந்தியா பாகிஸ்தான் எனக் கூறு போடும் அறிவிப்பு வெளியானபோது அம்ஜத்தும் சாகேத் ராமும் அதற்கு என்ன தேவை என அதிர்ந்துப் போகின்றனர்.

தனது அன்புக்குரிய அர்ணாவை (ராணி முகர்ஜி)ப் பார்ப்பதற்குக் சாகேத் ராம் கல்கத்தா புறப்படுகின்றார். இந்து முஸ்லீம் பிரிவினைவாதமானது கல்கத்தாவில் இனக் கலவரத்தைக் கிளறிவிட்டு எங்கும் ஒரே அல்லோல கல்லோலமாகிறது. லொறிகள் நிறைய இரத்தம் வழிந்தோடும் சடலங்கள் கூட்டமாகப் பலரால் கற்பழிக்கப்பட்டு வெட்டிக் கொல்லப்பட்ட பெண்கள், அநாதைகளாகப்பட்ட சிறுவர்கள்! உச்சக்கட்டத்தை அடைந்துள்ள கும்பல் வெறி அர்ணாவையும் இந்த வன்முறை வெறி விட்டு வைக்கவில்லை.

வகுப்புவாதத்தின் பைத்தியக்காரத்தனமானப் படுகொலைகளால் தனது சுயநிலையை இழக்கும் உச்சக்கட்டத்தில் இருந்த சாகேத் ராம் மைதிலி (வசுந்தரதாஸ்) என்னும் ஒரு பெண்ணை மறுமணம் செய்ய சம்மதிக்க வைக்கப்படுகிறார். குடும்ப சுகத்தில் அவர் ஆறுதல் பெறுவார் என உறவினர்கள் எண்ணுகின்றனர்.

ஆனால் சாகேத் ராமின் உள்ளத்தில் குமுறிக் கொண்டிருக்கும் அமைதியின்மை மீண்டும் வெளிக்கிளம்புகிறது. ஆனால் குடும்பப் பொறுப்பு ஒரு புறமும், பொதுப் பிரச்சினையில் அவரின் ஈடுபாடு தொடர்பான மனச்சாட்சி மறுபுறமும் என இருதலைக் கொள்ளி எறும்பாக சாகேத் ராம் தவிக்கிறார்.

தொடர்ச்சி 11ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் யாப்பு திருத்தத்தில் மலையக மக்களின் பங்களிப்பை புறக்கணித்ுவிட முடியாது

இலங்கை சுதந்திரமடைவதற்கு முன்னர் மலையக மக்களின் பிரதிநிதித்துவம் பாராளுமன்றத்தில் முக்கிய இடத்தைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். இதனை ஜீரணித்துக்கொள்ள முடியாத சிங்களப் பேரினவாதிகளே பிரதிநிதித்துவத்தைப் பறித்தார்கள் என்ற உண்மையை எவரும் இலகுவில் மறந்துவிட முடியாது.

மலையக மக்களின் வரலாறு அவர்களின் சமூகப் பொருளாதார பங்களிப்பு, தனித்துவம், வாழ்விடம் என்பனவற்றையும் வைத்துப் பார்க்கும் போது அவர்களை ஒரு தேசிய இனமாக அங்கீகரிப்பதில் எந்தவிதமான தயக்கமும் இருக்க வேண்டியதில்லை. இம் மக்களின் பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தையும் மற்றும் குடியுரிமையைப் பறித்தகாலம் முதல் இன்றுவரை மலையக மக்களின் சமூகப் பொருளாதார வாழ்வில் எந்தவொரு குறிப்பிடத்தக்க முன்னேற்றமும் இல்லை.

தொடரும் பிரச்சினைகளால் இம் மக்கள் 1950களின் தொடக்கத்திலிருந்து 1977, 1980, 1983, என வேவல்வத்தை லயன் குடியிருப்புக்கள் எரிக்கப்பட்டுச் சாம்பலாகும் வரையிலான வன்முறைகள் அவர்கள் மீது தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது.

இம் மக்களின் பிரதிநிதித்துவம் அந்தந்தக் காலப்பகுதியில் ஆளும் கட்சிகளுக்கு ஆதரவாக இருந்த போதிலும் இதை தடுத்து நிறுத்தவோ, அல்லது தடுத்து நிறுத்துவதற்கான முயற்சிகளோ, அவர்களின் பாதுகாப்பு நடைமுறைகளிலோ எந்தவொரு சாதகமும் தென்படவில்லை.

உழைப்பை மட்டுமே இந் நாட்டுக்கு வழங்கிக்கொண்டிருக்கும் இம் மக்களின் நிலை மிக மோசமானதாகவே காணப்படுகிறது. மலையக மக்களுக்கு குடியுரிமை, வாக்குரிமை ஓரளவுக்குக் கிடைத்த பின்பு இம் மக்களின் பிரதிநிதித்துவம் குறிப்பிடத் தகுந்ததாக காணப்பட்டது., அது அரசாங்கங்களை அமைப்பதற்கும், ஜனாதிபதித் தேர்தலில் சிறுபான்மையினரின் வாக்குகள் நாட்டின் ஜனாதிபதியைத் தீர்மானிப்பதில் குறிப்பிடத்தக்க ஆற்றலைக் கொண்டிருந்தது.

அது ஒரு விதமான பேரம் பேசுதலையும் இம் மக்கள் சமூகத்திற்குச் சாதகமாகத் தோற்றுவித்தது. மறுபுறத்தில் சிங்களக் கட்சிகளுக்கு முண்டு கொடுப்பதாகவும் அமைந்தது பாதகமான அம்சமாகும். இனப்பிரச்சினை, பேச்சுவார்த்தை என ஆரம்பிக்கும் போது திம்பு, வட்டமேசை, இலங்கை-இந்திய ஒப்பந்தம், சர்வகட்சிமாநாடு, பாராளுமன்ற தெரிவுக்குழு என்ற அரங்குகளிலெல்லாம் இம் மக்களின் நலன்கள் பற்றிய விவாதங்கள் எல்லாம் புறக்கணிக்கப்பட்டே வந்தன.

இலங்கையின் சனத்தொகையில் மூன்றாவது முக்கிய சமூகத்தவர்களாகவும், பொருளாதாரப் பங்களிப்பில் முதலாவதாகவும் உள்ள மலையக சமூகத்தின் ஆலோசனைகள், பங்களிப்புக்கள் புதிய அரசியல் யாப்புச் சீர்திருத்தத்திற்காகப் பெறப்படாதது பாரபட்சமானதும் அநீதியானதுமாகும்.

ஆனால் இன்று நிலைமை அப்படியல்ல. தொடர்ச்சியான புறக்கணிப்புக்களும், இனரீதியான பாகுபாடுகளும், மலையக சமூகத்தில் ஓரளவு ஐக்கியத்தையும் உருவாக்கியுள்ளன என்றே கூறவேண்டும்.

இது கடந்த பாராளுமன்ற, மாகாண தேர்தல்களிலும் சில தொழிற்சங்கப் போராட்டங்களிலும் ஐக்கியப்பட்டுச் செயற்பட வழிவகுத்தது. அரசியல் யாப்புச் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படுகையில் அதில் மலையக மக்களின் நலன்களைக் கருத்திற்கு எடுத்து சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும், விகிதாசார மற்றும் ஜனாதிபதி முறையை ஒழிக்கப்படுகையில் ஏற்படக்கூடிய சாதக, பாதக விளைவுகள் சம்பந்தமாக மலையக மக்களை பிரதிநிதித்துவப் படுத்தும் அரசியற் கட்சிகள், தொழிற் சங்கங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் ஒன்றிணைந்து கருத்துத் தெரிவித்திருப்பது முக்கியமான விடயமாகும்.

இத் தீர்வுத் திட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் போது இம் மக்களின் பிரதிநிதிகளின் பங்களிப்பை உள்ளடக்கியே புதிய யாப்பு உருவாக்கப்படல் வேண்டும். இதில் எந்தவொரு சமரசமுமின்றி உறுதியாக இருத்தல் வேண்டும்.

மலையகத்தில் கல்வி, வேலை வாய்ப்பு, கலாச்சாரம், பொருளாதாரம் ஆகிய விடயங்களில் மலையக மக்களுக்கு அதிகாரங்கள் பரவலாக்கப்பட வேண்டும். இவ் விடயம் பற்றி வடக்கு-கிழக்கு தமிழ், முஸ்லீம் அரசியல் தலைமைகள் மௌனமாக இருப்பது துரதிஸ்டமானதாகும்.

தற்போது மலையக பிரதிநிதிகளும் தொழிற்சங்க, அரசியல் கட்சிகள், அரச சார்பற்ற நிறுவனங்கள் அரசியல் சீர்திருத்தம் சம்பந்தமாக கருத்து முன் வைத்திருப்பதும் ஐக்கியப்படுவதும் ஆரோக்கியமான விடயங்களாகும்.

மலையக மைந்தன்

சமாதானத்தை வேண்டி மதத் தலைவர்களின் குரல்.....

திலுறன்

சமாதானத்திற்கும் நல்லெண்ணத்திற்குமான மக்கள் குழுவின் ஏற்பாட்டில் பல்வேறு வெகுஜன அமைப்புக்கள் கலந்து கொண்ட சமாதானப் பேரணி 28-03-2000 அன்று நடைபெற்றது. "வேண்டாம் வேண்டாம் யுத்தம் வேண்டாம்" "வேண்டும் வேண்டும் சமாதானம் வேண்டும்" என்பதே இப்பேரணியின் பிரதான முழக்கமாயிருந்தது.

நல்லூர்க் கந்தசுவாமி கோவிலிலிருந்து புறப்பட்டு கோவில் வீதி வழியாக துரையப்பா விளையாட்டரங்கை வந்தடைந்தது. அங்கு நடைபெற்ற பொதுக்கூட்டம் பலர் உரையாற்றினர்.

சமாதானத்திற்கும் நல்லெண்ணத்திற்குமான மக்கள் குழுவின் உபதலைவர் டி. அருமைநாயகம் கூட்டத்திற்கு தலைமை தாங்கினார். இக்கூட்டத்தில் உரை நிகழ்த்திய ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் "நாம் எல்லோரும் ஒன்று பட்டு நின்று அரசுக்கு கொடுக்க வேண்டிய அறிவிப்பைக் கொடுத்திருக்கின்றோம். அநியாயமான யுத்தத்தின் மூலம் இளஞ்சந்ததி அழிந்து கொண்டிருக்கின்றது. அரசு சிந்தித்துச் செயற்பட்டு எமது துன்பத்தைப் போக்க வேண்டும்" என்றார்.

அவரைத் தொடர்ந்து உரையாற்றிய யாழ் ஆயர் வணக்கத்துக்குரிய தோமஸ் சௌந்தர நாயம் அவர்கள் "நாம் எல்லோரும் அறைகூவல் விடுக்கின்றோம் சமாதானத்திற்கு ஒரு சந்தர்ப்பம் தாருங்கள்" என்றார். "பல ஆண்டுகளாக இந்த மண்ணில் இரத்தம் சிந்தப்படுகின்றது. இந்த மண்ணில் மாண்புடனும் சுதந்திரத்துடனும் வாழ இடமளிக்கப்படவில்லை மனித உரிமைகள் மறுக்கப்படுகின்றன. என்று தெரிவித்த அவர் பொறுப்பு வாய்ந்த அனைத்துத் தலைவர்களையும் நோக்கி அறைகூவல் விடுக்கின்றோம். மூன்றாம் தரப்பு உதவியுடன் அர்த்தமிகு தீர்வு ஒன்றைக் காண முன்வாருங்கள்" என்றும் கேட்டுக் கொண்டார்.

அடுத்ததாக சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் உரையாற்றுகையில், "எங்களுக்கு வேண்டியது சமாதானம் அதற்காக நாங்கள் காண்பிக்க வேண்டியது நல்லெண்ணம் எம் நாட்டவருக்கு இன்பம் வேண்டாம் ஆனால் எமது துன்பத்தின் தொகை குறைய வேண்டும், நல்லதை எண்ணுவோம், நல்லதையே செய்வோம்." என்று தனது உரையில் குறிப்பிட்டார்.

"இந்தச் சமாதான ஊர்வலத்தில் உங்கள் எல்லோருடனும் கலந்து கொள்ள முடிந்ததையிட்டு மிகவும் சந்தோஷப்படுகிறேன். எமக்குப் போரில் விருப்பம் இல்லை. வடக்கில் இருந்தாலும் தெற்கில் இறந்தாலும் இந்நாட்டு மக்களே இறக்கிறார்கள். நாம் அனைவரும் சமாதானத்திற்காக எமது சக்தியைப் பிரயோகிக்க வேண்டும் என்று உங்கள் எல்லோரையும் வேண்டிக்கொள்கிறேன்" என யாழ் நாக விகாரையின் இருஞானரத்தின தேரர் உரையாற்றும் போது குறிப்பிட்டார்.

கே.எம்.எஸ். ஹமீத் அவர்கள் உரையாற்றுகையில் "நாங்கள் கடந்த 17ஆண்டுகளாக எவ்வளவு துன்பங்களை அடைந்துள்ளோம் என்பதை அறிவீர்கள் தற்போது ஏதோ ஒரு வகையில் சமாதானம் பூத்திருக்கிறது இது காயாகி கனியாக வேண்டும்" என்றார். "இந்து, முஸ்லிம், கிறிஸ்தவம் என்ற பேதம் நீங்கி நான் இலங்கையன் என்ற உணர்வு எப்போது ஏற்படுகின்றதோ அப்போது தான் நாம் பரிபூரணமான சமாதானத்தை அடைய முடியும்" என்றும் தெரிவித்தார்.

சமாதானத்திற்கும் நல்லெண்ணத்திற்குமான மக்கள் குழுவின் சார்பில் திரு. எஸ். பரமநாதன், வண பிதா, ஜே.பி.ச. செல்வராஜா ஆகிய இருவரும் கையொப்பமிட்டு ஜனாதிபதிக்கு அனுப்பி வைப்பதற்காக தயாரிக்கப்பட்ட மகஜர் ஆங்கிலத்திலும் தமிழிலும் வாசித்துக் காட்டப்பட்டது, மாறி மாறி அதிகாரத்தைக் கைப்பற்றும் கட்சிகள் ஒரு கட்சி பிரச்சினைக்குத் தீர்வுகாண எடுக்கும் முயற்சிகளை மறு கட்சி எதிர்த்தும் பாழடித்தும் வந்துள்ளது. எனவே பரஸ்பரம் உடன்பாடு காணப்பட வேண்டும். எனவும் கால தாமதமின்றி யுத்தத்தை நிறுத்தி பேச்சு வார்த்தைகள் ஆரம்பிக்கப்பட வேண்டுமெனவும் அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநிலங்களுக்கு சுயாட்சியே தேசிய இனங்களின் பிரச்சினைக்குத் தீர்வு

இலங்கை அரசின் தீர்வுத் திட்டம் தொடர்பாக முன்னாள் வடக்கு-கிழக்கு மாகாண முதலமைச்சர் திரு வரதராஜப்பெருமாள் முன்வைத்துள்ள திருத்தப் பிரேரணைகளில் ஒரு பகுதியின் தமிழாக்கம்

01. சமஷ்டிக் குடியரசு

இலங்கை இனிமேல் "இலங்கை சமஷ்டிக் குடியரசு" என்று அழைக்கப்பட வேண்டும். அரசியல் யாப்புரீதியாகவும், சட்டரீதியாகவும் குழறுபடிகள் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காக இந்தத் தெளிவான பிரகடனம் தேவைப்படுகிறது. இதை எதிர்ப்பவர்கள் பற்றி அரசு பொருட்படுத்தத் தேவையில்லை. ஏனெனில் இதை எதிர்ப்பவர்கள் எந்தவித அதிகாரப் பகிர்வையும் எப்பொழுதும் எதிர்ப்பவர்களே.

02. தேசியக்கொடி

தற்போதுள்ள தேசியக்கொடி அது உருவாக்கப்பட்ட காலம் தொட்டே சர்ச்சைக்குரியதாக இருந்து வருகிறது. ஏனெனில் அது சிறுபான்மை இனங்கள் மீது சிங்களப் பெரும்பான்மை இனம் கொண்டுள்ள மேலாதிக்கத்தையே பிரதிபலிக்கின்றது. ஒரு நாட்டின் தேசியக் கொடியானது ஒரு புராண வரலாற்றைக் குறிப்பதாகவோ அல்லது அந்த நாட்டின் பெரும்பான்மை இனம் ஏனைய சிறுபான்மை இனங்கள் மீது செலுத்தக்கூடிய ஆதிக்கத்தைக் குறிப்பதாகவோ இருக்கக்கூடாது. மாறாக, அது அந்த நாட்டின் புனிதத்துவம், முன்னேற்றம், வளம் ஆகியவற்றைக் குறிப்பதாக இருக்க வேண்டும்.

எனவே, சிறிலங்காவின் தேசியக்கொடி அதற்கேற்றவாறு அனைத்து தேசிய இனங்களினதும் அபிலாசைகளைப் பிரதிபலிப்பதாகவும், எல்லோராலும் மதிக்கப்படக் கூடியதாகவும் மாற்றியமைக்கப்பட வேண்டும்.

03. நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை

அ) இனிவருங்காலத்தில் நாடாளுமன்றத்தில் எந்தவொரு தனி அரசியல் கட்சிக்கோ அல்லது எந்தவொரு தேசிய இனத்துக்கோ மூன்றில் இரண்டு பெரும்பான்மை உறுப்புரிமை கிடைக்காதவாறு அரசியல் யாப்பில் திருத்தங்கள் செய்யப்பட வேண்டும்.

ஆ) நாடாளுமன்றத் தொகுதிகளின் எல்லைகளை மீளமைத்தல் மூலமாகவோ, அல்லது ஒதுக்கப்பட்ட தொகுதிகள் முறை மூலமாகவோ சிறுபான்மையான தேசியஇனங்கள் கூட்டாக நாடாளுமன்றத்தின் மொத்த பிரதிநிதித்துவத்தில் மூன்றில் ஒரு பங்குக்கு குறையாமல் பிரதிநிதித்துவம் பெறவகை செய்யப்பட வேண்டும்.

04. தேசிய இனங்களின் அவை–நாடாளுமன்றத்தின் இரு அவைகள் முறை:–

ஐக்கிய தேசியக் கட்சி உட்பட சகல ஜனநாயகக்கட்சிகளும், ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்டுள்ள அனைவரும் இலங்கையின் தற்போதைய அரசியல் சமூக அமைப்புக்கும் நிலைமைகளுக்கும் ஓர் இரு-அவைகள் நாடாளுமன்ற முறை தேவைப்படுகின்றது என்பதை சர்ச்சைக்கிடமின்றி ஒப்புக் கொள்கின்றனர். அதில் இரண்டாவது அவையானது தேசிய இனங்கள் மத்தியில் சமத்துவத்தை நிலைநாட்டவும் பாதுகாக்கவும், எந்தவொரு இனத்தின் அடிப்படை உரிமைகளையும் பாதிக்கக்கூடிய விதத்தில் அரசின் எந்தவொரு பகுதியும் சட்டரீதியாகவோ, நிறுவனரீதியாகவோ செயற்படுவதைத் தடுக்கவும் கூடியதாக அமைக்கப்படல் வேண்டும்.

இந்த இரண்டாவது அவை "தேசிய இனங்களின் அவை" என்று கீழ்க்காணும் விளக்கங்களுக்கமைய அழைக்கப்படும்.

அ) இலங்கையின் பிரதான தேசிய இனங்களாவன:- சிங்களவர்கள், தமிழர்கள் (இவர்களில் மலையகத் தமிழர்கள் வலியுறுத்திக் கேட்டால் அவர்கள் ஒரு தனிப் பிரிவினராக கருதப்படலாம்) மற்றும் முஸ்லிம்கள்.

ஆ) இந்த அவையில் தேசிய சிறுபான்மை இனங்களின் கூட்டுப்பலமானது பெரும்பான்மைப் பிரதிநிதித்துவம் கொண்டதாக இருக்க வேண்டும்.

இ) இந்த அவைப் பிரதிநிதித்துவத்துவத்தின் கட்டமைப்பானது பிராந்திய சட்ட ஆக்குனர்கள், ஆசிரியர்கள், பட்டதாரிகள், பல்கலைக்கழகங்கள், கல்விமான்கள், விளையாட்டு வீரர்கள், தொழிலதிபர்கள், வர்த்தகர்கள், கணக்காளர்கள், வைத்தியர்கள், பொறியியலாளர்கள், சட்டத்தரணிகள், தொழிற்சங்கவாதிகள் போன்றவர்களைப் பிரதிநிதித்துவம் செய்வதாக இருக்கவேண்டும்.

ஈ) இந்த அவையானது முற்றிலும் நாடாளுமன்றத்தின் ஒரு பாகம் ஆகும். நாட்டின் இறையாண்மைக்கான பொறுப்பில் இந்த அவைக்கும் பங்குண்டு.

உ) மரபுரீதியாக எந்தவொரு பாராளுமன்றத்தினதும் இரண்டாவது அவைக்கு உரிய கடமைகளோடு, நாட்டில் உள்ள எல்லாத் தேசிய இனங்களினதும் அடிப்படை அபிலாசைகளையும் உரிமைகளையும் பாதுகாப்பதே இந்த அவையின் முக்கிய கடமையும் பொறுப்பும் ஆகும்.

ஊ) குடியரசின் உபதலைவரோ அல்லது குடியரசுத் தலைவரால் அனுபவம் வாய்ந்தவர், மூத்தவர் என்று கருதப்பட்டு நியமிக்கப்படும் ஓய்வு பெற்ற அரச உயர் அதிகாரி ஒருவரோ இந்த இரண்டாவது அவையின் தலைவராகச் செயற்படல் வேண்டும்

. எ) நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் ஒரு சட்ட நகலோ, தீர்மானமோ இந்த நாட்டிலுள்ள ஏதாவதொரு குறிப்பிட்ட தேசிய இனத்தின் நலன்களுக்குப் பாதகமானது என்று இந்த அவையில் உள்ள ஒரு குறிப்பிட்ட தேசிய இனத்தைச் சேர்ந்த பிரதிநிதிகளில் 50 சதவீதத்துக்கு குறையாத எண்ணிக்கையினர் கருதினால், அந்தச் சட்ட நகலோ, தீர்மானமோ நாடாளுமன்றத்தினால் நிறைவேற்றப்படுமுன் இந்த இரண்டாவது அவையினால் திருத்தம் செய்யப்பட்டு நிறைவேற்றப்படல் வேண்டும்.

ஏ) அரசியல் யாப்பின் எந்தவொரு முக்கியமான உள்ளடக்கத்திற்கும் தேவைப்படும் திருத்தமானது சிறுபான்மை இனத்தவர் சம்பந்தப்பட்டதாக இருந்தால், அந்தத் திருத்தத்துக்கு முதலில் இந்த அவையின் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பிரதிநிதிகளின் ஒப்புதல் பெறப்பட வேண்டும்.

05. மதச்சார்பற்ற நாடு

இலங்கை ஒரு பல்லின, பல்மத, பல்கலாச்சார நாடு. ஆனால், 1972ல் இருந்து இலங்கையின் அரசியல் யாப்பு இலங்கையை ஒரு சிங்கள பௌத்த நாடு எனப் பிரகடனப்படுத்தியுள்ளது. இந்த அரசியல் யாப்பானது நாட்டிற்கு எந்தவித காத்திரமான அபிவிருத்தியையும் தேடித்தரவில்லை. மாறாக பரஸ்பர நம்பிக்கையீனத்தையும் நாசத்தையுமே தேடித் தந்துள்ளது.

புத்தர் என்ற உயர்ந்த பெயரை குறுகிய அரசியல் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தியது. உண்மையில் அந்த மகானின் உன்னத போதனைகளுக்கு எதிரானதாகவே உள்ளது. பௌத்த சாசனம் மனித குலத்துக்கு உயர்ந்த நாகரீகத்தையும், உலகம் பற்றியும், உலக விவகாரங்கள் பற்றியுமான தத்துவத்தையும் கற்றுத் தருவது. ஆனால் அதனை அரசியல் யாப்பினுள் புகுத்தலானது அரசியல் நோக்கம் கொண்டது என்பதுடன், ஏனைய சமயங்கள் புறக்கணிக்கப்படுவதற்கான வழிவகைகளை உண்டுபண்ணுவதாக அமைகின்றது.

இதனால் ஏனைய சமயத்தவர்கள் தாங்கள் அந்நியர்களாகக் கருதப்பட்டு புறக்கணிக்கப்படுவதாக உணரச் செய்வதோடு, ஒரு வேளை புத்தபிரானும் ஓர் அடிப்படை மதவாதியோ என்று அவர்களை எண்ண வைக்கிறது. புத்தபிரானின் போதனைகள் தான் அசோகச் சக்கரவர்த்தியை யுத்தத்துக்கு எதிராக சிந்திக்கத் தூண்டியது. ஆனால் இங்கு வேதனைப்படக்கூடிய விடயம் என்னவெனில், இந்த நாட்டில் புத்தபிரானின் போதனைகள் மக்களிடையே யுத்தத்தை ஏற்படுத்தவே பயன்படுத்தப்படுகின்றன.

இந்த நாட்டிலுள்ள ஒவ்வொரு சமயமும் அரசியல் சார்பற்றதாக இருத்தல் வேண்டும். வெவ்வேறு மத நம்பிக்கைகளைக் கொண்ட சகல மக்களினதும் அடிப்படை அபிலாசைகளையும் ஆவல்களையும் சமமாக பாதுகாப்பது மட்டுமே சமயங்கள் தொடர்பான அரசின் கடமையாக இருத்தல் வேண்டும்.

நம்பிக்கைகள், உண்மைகள், அறிவு என்பன முழு உலகுக்கும் சொந்தமானவையே தவிர ஒரு தேசத்துக்கோ அல்லது ஒரு பிராந்தியத்துக்கோ உரியன அல்ல. ஒரு நாட்டின் அரசியல் வழிகாட்டியே அந்த நாட்டின் அரசியல் யாப்பு ஆகும். அத்தகைய அரசியல் யாப்பு எந்தவொரு மதத்தையும் மக்கள் மீது திணிக்கப் பயன்படுத்தப்படக் கூடாது. அவ்வாறு செய்வதானது அந்த நாட்டின் அபிவிருத்திக்கும், அறிவு, உண்மை ஆகியவற்றின் பரிணாம வளர்ச்சிக்கும் தடையாக இருக்கும்.

எனவே, சமயங்களும் சமயத் தலைவர்களும் சுதந்திரமாகவும் வெளிப்படையாகவும் இருக்கட்டும். எந்தவொரு சமயமும், சமய விடயமும் அரசியல் யாப்பின் பகுதியாக இருத்தல் கூடாது.

06. இலங்கையின் குடிமக்கள்

அ) குடியுரிமை தொடர்பாக 1948, 1949 ஆண்டுகளில் உருவாக்கப்பட்ட சட்டங்கள் நீக்கப்படுவதோடு மலையகத் தமிழர்கள் தொடர்பாக இந்தியாவுடன் செய்து கொள்ளப்பட்ட சகல ஒப்பந்தங்களும் உடன்படிக்கைகளும் காலங்கடந்தனவாகவும், காலாவதியாகியனவாகவும் கருதப்படல் வேண்டும்.

ஆ) தற்போதைய அரசியல் யாப்பு உருவாக்கப்பட்ட திகதியில் இலங்கைப் பிரஜைகள் எனப்படுபவர்கள் யாரென்றால்-

(1) அரசியல் யாப்பு "நடைமுறைக்கு" வந்த திகதிக்கு முன் 10 வருடங்களுக்கும் மேலாக இலங்கையில் வெளிநாட்டவர்களென பதிவு செய்யப்பட்டு வசித்துவருபவர்களும், அத் திகதியில் இலங்கையில் வசிக்கும் ஏனைய அனைவரும்.

(2) வெளிநாடுகளில் வதியும் இலங்கைக் கடவுச் சீட்டு வைத்திருப்பவர்கள்.

(3) பிரகடனப்படுத்தப்பட்டோ அல்லது அவ்வாறு இல்லாமலோ வெளிநாடுகளில் தங்கியிருக்கும் இலங்கை அகதிகள்.

(4) 22 மே 1972க்குப் பின்னர் இலங்கையை விட்டு வெளியேறி வெளிநாடுகளில் பிரஜா உரிமை பெற்று வாழும் இலங்கையர்கள்.

07. சரியான சொற்பதங்கள்:

"பிராந்திய நிர்வாகம்" என்று அரசாங்கத்தின் நகல் பிரேரணையில் குறிப்பிடப்பட்டுள்ள சொற்பதமானது அரசியல் மற்றும் சட்ட ரீதியில் முறையாக "பிராந்திய அரசாங்கம்" என்று மாற்றப்பட வேண்டும். பிரதம செயலாளர் தலைமையில் செயல்படுவதே பிராந்திய நிர்வாகம். பிராந்திய அரசாங்கம் அதன் தலைவரான முதலமைச்சரின் கட்டுப்பாட்டுக்கும் பணிப்புரைகளுக்கும் உட்பட்டு இருப்பதோடு அவரின் பொறுப்புக்கும் உட்பட்ட ஒன்றாகும். பிராந்திய சட்ட சபைக்கு சபாநாயகர் தவிசாளர் என்பவர் தலைமை தாங்குவார்.

பிராந்திய அரசு என்பது பிராந்திய சட்டசபை, பிராந்திய காவல்துறை மற்றும் குடியியல் நிர்வாக அமைப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய பிராந்திய நிர்வாகம், மற்றும் பிராந்திய நீதித்துறை ஆகியவற்றை உள்ளடக்கிய கருத்து ஆகும். இதற்கு ஆளுநரே தலைவராவார்.

அதிகாரப் பரவாக்கல் பற்றி "பெரும்பான்மை மக்கள் தவறாகப் புரிந்து கொள்ளக் கூடாது" என்ற பெயரில் உத்தேசிக்கப்பட்டிருக்கும் அரசியல் யாப்பில் சரியான, பொருத்தமான சொற்பதங்கள் உள்ளடக்குவதை தவிர்க்க வேண்டும் என்று மத்திய அரசு எண்ணுமேயானால் அது எதிர்காலத்தில் பல குழப்பங்களுக்கு வழி வகுக்கும். அத்துடன், அதிகாரப் பரவலாக்கலுக்கு எதிரான சக்திகள் அதனைத் தங்களுடைய நோக்கங்களுக்காகப் பயன்படுத்தவும் வழிவகுக்கும்.

நாட்டைப் பிரிக்காமல் எந்த அளவுக்கும் அதிகாரப் பகிர்வு செய்வதற்கு சிங்கள மக்களில் பெரும்பான்மையினர் தயாராகவே உள்ளனர். அதேபோல தமிழ் மக்களில் மிகப் பெரும்பான்மையினரும் இந்த நாட்டைப் பிளவு படுத்தாமல் ஒரு ஐக்கிய இலங்கைக்குள் நியாயமான அளவு அதிகாரப் பகிர்வுடன் சமாதானம் ஏற்பட வேண்டும். என்பதையே எதிர்பார்க்கிறார்கள். இதற்கான மனவைராக்கியமும், தீர்க்கமான உறுதியும் இந்த நாட்டின் சகல அரசியல் தலைவர்களுக்கும் ஏற்பட வேண்டும்.

எந்தத் தரப்பிலும் உள்ள குறுகிய நோக்கம் கொண்ட இனவாதிகளால் இழுபடாமலும், தங்கள் சொந்த குறுகிய அரசியல் இலாபங்களுக்கு அப்பால் சென்றும், இந்த நாட்டின் சகல தரப்பு மக்களுக்கும் சமாதானம், ஜனநாயம், சுதந்திரம், மற்றும் சகோதரத்துவம் ஆகியவற்றை வழங்குவதற்கு இந்த தலைவர்கள் செயல்பட வேண்டும். ●

உலர் உணவு வினியோகத்தில் இழுபறி

அநுராதபுரம், இக்கிரிகொலாவ, தங்கவேவ போன்ற கிராமங்களில் இடம்பெயர்ந்து அகதிகளாக வாழும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட முஸ்லிம் குடும்பங்கள் மாதாந்தம் உலர் உணவு பெறுவதில் பல சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இவர்கள் வவுனியா கிராமங்களான சாளம்பைக் குளம், ஆண்டியாபுளியங்குளம், மற்றும் முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், மன்னார் பிரதேசங்களைச் சேர்ந்தவர்களாவர்.

மாதாந்தம் வழங்கப்படவேண்டிய உலருணவு மூன்று மாதத்துக்கு ஒரு தடவையே வழங்கப்படுகிறது. ஐந்து பேர் கொண்ட குடும்பத்துக்கு மாதம் 1200 ரூபா பெறுமதியான பொருட்கள் வழங்கப்பட வேண்டும். அரிசி, சீனி, பருப்பு, தேங்காய் எண்ணை போன்ற அத்தியாவசிய பொருட்களே உலர்உணவு என வழங்கப்படுகின்றன.

வேறு தொழில் வசதியோ, வருவாய்க்கான மார்க்கங்களோ இல்லாத நிலையில் இவர்கள் வறுமையின் கோரப்பிடிக்குள் அகப்பட்டுள்ளார்கள்.

இவர்களின் கல்வி நிலை அதைவிட மோசமானது.

பிரதேச செயலகமும், கூட்டுறவுச் சங்கமும் இவ்விடயத்தில் கண்திறப்பார்கள் இல்லையோ ஜனாதிபதியின் நேரடிக் கட்டுப்பாட்டில் இருக்கும் வடக்கு புனர்வாழ்வு புனரமைப்பு அபிவிருத்தி அதிகார சபையும், புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சும் இம் மக்களின் இந்த ஜீவாதாரப் பிரச்சனைகளில் தீவிர அக்கறை செலுத்த வேண்டும்.

இதேபோல் புத்தளம் அகதி முகாம்களில் வசிக்கும் மக்களுக்கும் இப் பொருட்கள் தாமதமாகவே கிடைக்கின்றன. தேங்காய் எண்ணை வழங்கப்படுவதில்லை.

ஒரு காலத்தில் சுயசம்பாத்தியத்தில் வாழ்ந்த சமூகம் சிதறுண்டு அழிந்து கொண்டிருக்கிறது. அது இன்றைய காலகட்டத்தின் இயல்பு என்று யாரும் சாவகாசமாக இருந்துவிட முடியாது.

யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்படுவதும், இந்த மக்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிச் சென்று மீள்குடியேறுவதும் மனிதாபிமான முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களாகும். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரூரத்தை வெளிப்படுத்தும் குண்டுவெடிப்புக்கள்

எமது சமூகப் பாரம்பரியத்தில் பிள்ளைகள் என்பது செல்வங்கள். பிள்ளை வளர்ப்பு என்பது ஒரு பிரயாசையுடனும் சம்பந்தப்பட்டது. பிள்ளைகளுக்கு ஒரு நோய்நொடி என்றால் எமது பெற்றோர்கள் பதறிப்போய்விடுவார்கள். ஒரு சிறு காய்ச்சல் என்றால் கூட கொத்தமல்லி இஞ்சி என்றும், சுடுதண்ணி ஒத்தடம் என்றும் அவதிப்படுவார்கள். தமது பிள்ளைகள் பாடசாலைக்குச் சென்று திரும்பி வரும் வரை வழிமேல் விழி வைத்திருக்கும் குடும்பம். சாப்பிடாமல் பாடசாலைக்குச் சென்றால்கூட கவலை தோய்ந்திருப்பர்.

ஆனால், இன்று குண்டாக மாறி சிதறுண்டு தலைவேறு முண்டம் வேறாக மூளை சிதற நிணத்தில் மிதக்கிறார்களே நமது இன்றைய இளம் தலைமுறையினரின் ஒரு பகுதியினர்.

வீதியில் குண்டாக மாறி வெடித்துச் சிதறுகையில், மனதைக் கல்லாக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்கையிலே எத்தனை சிங்கள, தமிழ், முஸ்லிம் தசைகள் வீதியில் துடிக்கின்றன. எல்லா இரத்தமும் கலந்து உறைந்து விடுகின்றனவே.

விறகடுக்கி, கொள்ளிக்குடம் சுமந்து, புனித நீர் தெளித்து எரியூட்டப்படுவது அல்லது அடக்கம் செய்யப்படுவது மிக நேர்த்தியாக நடைபெறும் எமது சமூகத்தில் எந்தப் பெறுமானமும் இன்றி அநாதரவாக வீதி வீதியாகக் குரூரமாக மரணம் நிகழ்கிறதே நெஞ்சே பொறுக்குதில்லையே!.

புங்குடுதீவில் பாலியல் பலாத்காரத்துக்கு உள்ளாக்கப்பட்டுப் படுகொலை செய்யப்பட்ட சாரதாம்பாளின் உடல் காவோலையால் மூடப்பட்டதே. ஒரு மாதத்துக்கு மேல் ஆஸ்பத்திரியில்கூட முறையாகப் பராமரிக்கப்படாத தாயின் உடலைப் பார்க்க ஆசைப்பட்ட அவரின் சின்ன மூன்று வயது மகள் தாயின் கோரத்தைப் பார்க்கச் சகிக்க முடியாமல் நிணநெடி தாங்க முடியாமல் கதறி ஓடினாளே. அய்யகோ, இந்த அவலம் எமது சமூகத்தில் தொடரத்தான் வேண்டுமா?

வீதியில் குண்டாக மாறி வெடித்துச் சிதறுகையில், மனதைக் கல்லாக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்கையிலே எத்தனை சிங்கள தமிழ் முஸ்லிம் தசைகள் வீதியில் துடிக்கின்றன. எல்லா இரத்தமும் கலந்து உறைந்து விடுகின்றனவே.

எமது தாய் தந்தையர் எப்போதும் பிள்ளைகளை விருப்பத்துடனும், குரோதத்துடனும் யுத்தத்துக்கு அனுப்புவதில்லை. ஆனால், எமது பெற்றோர்கள் எத்தனை கோவில்களில் அடியளித்திருப்பார்கள். எத்தனை தேவாலயங்களில், எத்தனை மசூதிகளில், எத்தனை விகாரைகளில் பிரார்த்தித்திருப்பார்கள்.

இதற்கப்பால் யுத்தம் புரியாத எத்தனை மனிதர்கள் இறந்தார்கள். எத்தனை சிறுவர் சிறுமியர் தாய் தந்தையரை உற்ற சுற்றத்தை இழக்கிறார்கள். எத்தனை விதவைப் பெண்கள், எத்தனை நடைப்பிணங்கள் உருவாகிறார்கள். கல்வாரிக்குச் சிலுவை சுமந்த யேசுவைப்போல இவர்களுக்கே புரியாத வெறுமையும் இடரும் நிறைந்த பாதையில் சூனியத்தை நோக்கிப் பயணிக்கிறார்களே.

செல்வியும், ரஜனிதிரணகமவும், சரோஜினியோகேஸ்வரனும், கிருஷாந்தியும், ரஜனியும், கோணேஸ்வரியும், சாரதாம்பாளும், கமலிந்றாவும், சின்னச் சிறுவர்களும், சிறுமியரும் அச்சமின்றி வாழும் அந்தப் பொன்னான காலம் உருவாக வேண்டும்.

இந்த மனிதர்களின் அவலத்தைவிடவா, துயரத்தைவிடவா, ஒரு நாட்டிற்குப் பிறிதொன்றிருக்கிறது.

வன்முறையும் குரோதமும் எமது சமூகத்தில் மனிதகுல அழிவைத்தானே ஏற்படுத்தி இருக்கிறது. இனத்துவ மாண்புகளையும், கற்பனை இறைமைகளையும் மறந்துவிட்டால் மனிதரின் மாண்பு இங்கு உயர்[illegible] நாம் வேறொரு புத்தம் [illegible] உலகத்தினுள் பிரவேசித்திருப்போம்.

மேற்கத்திய நாடுகளுக்கும் இந்தியாவுக்கும் புலம் பெயர்ந்துவிட்ட, உள்நாட்டில் இடம் பெயர்ந்துவிட்ட எமது தமிழ் சிங்கள முஸ்லிம் சகோதரர்களை நினைத்துப் பாருங்கள். பலருக்குத் தாம் எந்தக் கிராமத்தைச் சேர்ந்தவர்கள் என்றே கூறமுடியாத நிலை. பல இடங்கள் சிந்துவெளிப் பகுதிகள் போல் மொகஞ்சதாரோ, கரப்பாபோல் மாறிவிட்டனவே. முன்பு இங்கு மனிதர்கள் மாண்புகளுடன் வாழ்ந்தார்கள் என்று இறந்த காலத்தில் பேச வேண்டிய நிலையிலல்லவா எமது பல கிராமங்கள் மாறியிருக்கின்றன. பல கிராமங்கள் சுவடில்லாமல் அழிந்துவிட்டனவே.

ஒரு கிராமத்தின் அல்லது ஒரு பிரதேசத்தின் மக்கள் சமூகம் இடம்பெயர்ந்து அப்பிரதேசத்தின் அழிவென்பது சாதாரண விடயமல்ல. அந்த கிராமத்தில் பிறந்து, அந்த பிரதேசத்தில் வளர்ந்து, பாடசாலை சென்று கல்வி பயின்று, பாலிய வயது சில்மிசங்களையெல்லாம் செய்து, தோட்டம் வயல், கடல் என உழைப்பைச் செலுத்தி, பயன்கண்டு மகிழ்ந்து, கோவில் திருவிழாக்கள் நடத்தி சனசமூக நிலைய கூட்டங்கள், [illegible] ஒரு மனிதனின் உருவாக்கத்தில் அந்தவேர் பிடித்த தளத்தின் இழப்பு தொப்புள் கொடியை அறுத்தது போன்ற நிலைமை ஆகும்.

புத்தளத்தில் வாழும் முஸ்லிம் மக்களென்ன சீரும் சிறப்புமாகவா வாழ்கிறார்கள். அவர்கள் மன அமைதியுடன் தொழுகை நடத்திய யாழ்ப்பாணத்து பள்ளிவாசல்களில் ஆலமரம் சுவரைப் பிளந்து விழுது விட்டிருக்கிறதே!. பல வீடுகளின் பிரதான வாசலில் பிரமாண்டமான சிலந்தி வலைகள். சில வீடுகளில் சுவர்க்கற்களும் இல்லை. எமது பல கிராமங்கள் பேயாட்சி செய்வதுபோல் மயான அமைதியுடன் காணப்படுகின்றனவே. மானிட உயிர்ப்புகளை, அங்கு இல்லாமல் போய்விட்டது.

எம் தேசத்தில் சமாதானம் நம்பிக்கை என்ற செங்கம்பளத்தை விரித்துச் சிதறுண்ட எம் மக்களை வரவேற்போம்! புத்தாயிரத்தில் தோன்றியிருக்கும் சமாதானத்துக்கான அறிகுறிகளைப் பற்றிப்பிடித்து முன்னேறுவோம்!!

தனது வாழ்க்கையின் சகல பிடிமானங்களையும் இழந்து தலைவிரி கோலமாக நின்ற கண்ணகியைப் போன்ற நிலையிலல்லவா எமது தேசம் இருக்கிறது.

ஐயகோ, விடுதலையின் பேரால் எல்லாவற்றையும் இழந்து போனோம். பிறந்த பொன்னாட்டை, பெற்ற தாயை, உற்ற சுற்றத்தை, இனிய நண்பர்களை, இரம்மியமான இரவுகளை, மகிழ்ச்சி பிரவாகிக்கும் பகல்களையெல்லாம் நாம் இழந்து போனோம்.

தேசபக்தியைப் பற்றி வாய்கிழியப் பேசும் தமிழர்களில் யார் எமது பிரதேசங்களில் வாழத்தயாராக இருக்கிறார்கள். தூரத்தே நின்று தமக்காகச் சுயபரிதாபப்படும் அல்லது எல்லாவற்றையும் அடியோடு மறந்துபோனவர்களாக போன போன இடங்களில் சங்கமித்தவர்களாக அல்லவா எமது தமிழர்கள் பலர் இருக்கிறார்கள்!. தாம் வாழும் இடத்தில் மகிழ்ச்சியை அமைதியைத் தேடவிழைபவர்கள் தமது சொந்த தேசம் நிமிர்வதற்கு ஏதாவது செய்ய வேண்டுமென்று நினைக்கிறார்களா?.

உண்மையில் நியாயபூர்வமான தீர்வை வென்றெடுப்பதும், எமது பிரதேசத்தில் சமாதானம் மலர்வதும் இன்று முதலும் முக்கியமானதும் ஆகும். இன்னும் பல தசாப்தங்களுக்கு யுத்தம் தொடருமானால் இப்போதே கண்ணி வெடிகளாலும், இடிபாடுகளாலும் நிறைந்து போயுள்ள எமது தேசம் சுடுகாடாகிவிடும்.

எமது தேசம் "மூதேவி சென்றிருந்து வாழும் சேடன் குடிபுகும்" இடமாக அல்லாமல் வாழ்வு பூத்துக் குலுங்கும் இடமாக மாற்றப்பட வேண்டும்.

செல்வியும், ரஜனிதிரணகமவும், சரோஜினியோகேஸ்வரனும், கிருஷாந்தியும், ரஜனியும், கோணேஸ்வரியும், சாரதாம்பாளும், கமலிற்றாவும், சின்னச் சிறுவர்களும், சிறுமியரும் அச்சமின்றி வாழும் அந்தப் பொன்னான காலம் உருவாக வேண்டும்.

அந்தக் காலத்தை உருவாக்குவதற்கு யாரும் இரட்சகர்கள் வரமாட்டார்கள். பெண்மையைப் போற்றுவோர், மானிட இதயங் கொண்டோர் இதனை மேற்கொள்ள வேண்டும்.

சமாதான நம்பிக்கைகளை உருவாக்கும் சின்னக் கீற்றுத் தெரிந்தால்கூட அதனை விட்டு விடக்கூடாது.

எவ்வளவு சாதகங்கள் தெரிந்தாலும் அது சிறிதோ பெரிதோ நாம் உற்சாகப்படுத்தியே ஆக வேண்டும். மனிதர்களின் நல்லியல்புகளை வளர்ப்போம். நட்புணர்வு, பரஸ்பரம் ஒருவரின் உரிமையை மற்றவர் மதித்து நடக்கும் பண்பை உருவாக்குவோம்.

தி. சிறிதரன்

இந்த நாட்டில் மதங்களைப் பற்றிப் பெரிதாக எல்லாம் பேசுகிறார்களே! ஆனால் பூச்சி புழுக்களைத்தானும் கொல்லாதே என்றல்லவா எமது மதங்கள் போதிக்கின்றன. இங்கே மனிதனுக்கு, இயற்கைக்கு என்ன மரியாதை இருக்கிறது.

மனிதனையும் அழித்து அவன் வாழும் சுற்றாடலையும் அல்லவா அழிக்கிறார்கள். இவ்வாறு அழித்து என்ன மிஞ்சப்போகிறது. இனங்களின் பெருமையா! மதத்தின் கீர்த்தியா!! இனவெறி மதவெறி கொண்டவர்களிடம் இனங்களின் தோற்றம் மதங்களின் போதனை பற்றி ஏதாவது அறிவு இருக்கிறதா?. மனித துவேசம் கொண்ட குரோதம் மாத்திரமே எஞ்சியிருக்கிறது!. நல்லவற்றையெல்லாம் விட்டுவிட்டு கெட்டவற்றை ஏன்தான் தேர்ந்தெடுக்கிறார்களோ!!.

ஸ்லாவிய மக்கள், பொஸ்னியர்கள், கொசோவோவியர், ஆப்கானியர், ருவண்டா வாழும் ருட்சிகளும், ஹாடுகளும், ஈராக்கியர், செச்சினியர், திமோரியர் இவர்களின் அழிவு யாருக்கு நன்மை!. இந்த மானிட இனங்கள் வாழும் இடங்கள் அழிக்கப்படுவதால் யாருக்கு நன்மை. அழிவைச் செய்பவர்களுக்கு இது நன்மையா?.

கொப்பிலிருந்து அடிமரத்தை வெட்டுவது போலல்லவா இது. மனித குலம் முழுவதும் பரஸ்பரம் உதவிகரமாக வாழ்தல் அல்லாமல் அது முழு மனித குலத்துக்கும் சர்வ நாசமல்லவா.

புதிய உலக ஒழுங்கு, உலக கிராமம் பற்றி வாய்கிழியப் பேசுபவர்கள் பூமிப்பந்தின் ஒரு பகுதியில் மானிட வாழ்வை, இயற்கைச் சுற்றாடலை அழிப்பதைப் பற்றி மூச்சு விடுவதில்லை.

தொடர்ச்சி 09ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யார் இந்தப் பிஞ்சுக்குள் நஞ்சை விதைத்தார்கள்?

ஐக்கிய அமெரிக்காவிலுள்ள பாடசாலைச்சிறுவன் ஒருவன் தனது சகமாணவியான சிறுமியை துப்பாக்கியால் சுட்டுக் கொலைத் செய்துள்ளான். மனித உரிமை, உலக ஒழுக்கம் பற்றிப்பேசும் அமெரிக்காவின் சிறுவர் நிலை இதுதான்.

தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் மயிர்க்கூச்செறியும் காட்சிகளைப் பார்த்துப்பழகிய சிறுவர்கள் வன்முறை என்பது இயல்பான ஒன்றென்ற மனோபாவத்திற்கு உள்ளாகி உள்ளார்கள்.

இது மிகப்பெரும் சமூக அதிர்ச்சியை ஏற்படுத்தும் விடயமாகும். கல்விமுறை முன்னேற்றகரமாக இருப்பினும் அதற்குப் புறம்பாக சிறுவர்களுக்காகத் தயாரிக்கப்படும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், சினிமாக்கள், இணையங்கள் நிகழ்ச்சிகள் பொறுப்புணர்வுடன் தயாரிக்கப்படவேண்டும். இதைப்போன்ற பல சம்பவங்கள் மேற்கத்திய நாடுகளில் நிகழ்ந்துள்ளன.

அடிக்கடி நடைபெறும் விவாகரத்துக்கள் தாய்தந்தையர் பிரிந்து போதலும் இத்தகைய நிலவரங்களுக்குக் காரணமாய் இருக்கலாம். பாடசாலைச் சிறுவர்கள் துப்பாக்கிப்பிரயோகம் செய்தால் வருங்காலம் எப்படி இருக்கப்போகிறது என்பது ஊகிக்கக்கூடியதே.

இவற்றை தற்செயல் நிகழ்ச்சிகள் என்று சமாளித்து விட்டுப் போக முடியாது. காரணம் இவை பரவலாக நடைபெறுகின்றன. இவற்றுக்கான சமூக பொருளாதார, சுற்றாடல் மனோவியல் காரணங்கள் பற்றித் தீவிரமாக ஆய்வு மேற்கொள்ளப்படவேண்டும். •

சர்வசாதாரணமாகிவிட்ட இயற்கை அனர்த்தங்கள். மனித குலத்தை பாதுகாப்போம்!

ஊழிக்காலமோ என அஞ்சும் வகையில் அண்மையில் மொசாம்பிக்கில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு ஆபிரிக்கா கண்டத்தை மாத்திரமல்ல உலகத்தையே அதிரவைத்துள்ளது. மரக்கிளையில் உயிரைக்கையில் பிடித்துக் கொண்டிருந்த பெண்ணுக்கு பிரசவம் நிகழ்ந்தது. மனித வாழ்க்கை இயற்கையின் கோரத்தாண்டவத்தில் எந்தளவு ஊசலாடுகிறது என்பதற்கு மொசாம்பிக் வெள்ளமும் புயலும் எடுத்துக்காட்டு.

இதே போன்றதொரு ஒரு பெருவெள்ளமும் புயலும் இந்தியாவின் ஒரிசா மாநிலத்தைத் தாக்கி பல்லாயிரக்கணக்கான மக்களின் வாழ்க்கையை சூறையாடியது நாம் எல்லோரும் அறிந்ததே. சில மாதங்களுக்கு முன் தாய்லாந்தில் ஏற்பட்ட பூமி அதிர்ச்சி பல்லாயிரம் பேரின் உயிரை காவு கொண்டதை, நியூசிலாந்தின் பனிமலை லாவாக்களை (பிளம்புகளை) உமிழ்ந்து தீப்பிடித்ததை ஆப்கானிஸ்தான் பிலிப்பைன்ஸ் மற்றும் தென்னமெரிக்கா பகுதிகளில் ஏற்பட்ட பூகம்பங்கள், இந்தோனேசியா, வடஅமெரிக்காவின் காடுகள் தீப்பிடித்து எரிந்தமை ஆகியவை பேரழிவை ஏற்படுத்திய அனர்த்தங்கள் ஆகும்.

ஓசோன் படலத்தில் ஏற்பட்டிருக்கும் ஓட்டை மாபெரும் அச்சுறுத்தலாகியிருக்கிறது.

மத்தியகிழக்கின் கடற்பகுதி எண்ணைக்கழிவுகளால் கடல் வாழ் உயிரினங்களின் அழிவுக்கு வழிவகுத்துள்ளது.

மனிதனால் தள்ளப்படும் பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் கழிவுகள் உலகத்தில் தரை, நீர் நிலைகளை நிறைத்துள்ளன.

காற்றின் காபனீ ஒட்சைட்டின் அதிகரிப்பு, வெப்பநிலை அதிகரிப்பை ஏற்படுத்தி இருப்பதோடு துருவங்கள் உருகும் ஆபத்தையும் ஏற்படுத்தி உள்ளது.

சூழல் மாசடைதல், நீர் நிலைகள் காற்று எல்லாவற்றையும் பாழடித்துள்ளது. உலகம் இதுவரை கண்டிராத புதுப்புது நோய்கள் வேகமாகப் பரவி வருகின்றன.

மாறிமாறி நடக்கும் பாரிய இயற்கை அனர்த்தங்களுக்கு மனிதனின் அலட்சியமும், சுயநலமும் காரணமாக இருந்திருக்கின்றன. என்பதை ஒரேயடியாக மறுதலித்துவிடமுடியாது.

அரசியல் சமூக பொருளாதார துறைகளில் எவ்வளவோ அக்கறை இருக்கிறதோ அதற்கு ஒருபடி மேலே இன்றைய எமது சூழல் பற்றிய அக்கறையை நாம் செலுத்தியாக வேண்டும்.

இது எமது வருங்கால சந்ததியினது நல்வாழ்வுக்கு அவசியமானது.

யுத்தம் எமது சுற்றாடலில், இயற்கையில் மிகப்பாரதூரமான தாக்கங்கங்களை ஏற்படுத்தியிருக்கிறது.

எமது சுற்றாடல் கண்ணிவெடிகளால் நிரம்பி வழிகிறது. எமது பெருமளவு காடுகள் அழிக்கப்பட்டுள்ளன. கால்நடைகள், வயல்நிலங்கள் பாழடிக்கப்பட்டுள்ளன. பெரிய குளங்கள் நீர் நிலைகள் தூர்ந்துபோய் உள்ளன.

அரிதான பல விலங்கினங்கள், மரஞ்செடிகொடிகள் எமது பிரதேசங்களில் மனிதர்களைப் போலவே அருகிப்போய்விட்டன.

இந்த இயற்கை, மனித குலத்தின் நல்வாழ்வு தொடர்பாக பாதுகாக்கப்படவேண்டும். ஒன்றை ஒன்று அனுசரித்துத்தான் நடந்து கொள்ளவேண்டும். •

செச்சினியா மனித உரிமை மீறல்கள்

செச்சினியாவில் மனித உரிமை மீறல்கள் நடைபெற்றிருப்பது உண்மையே. ரஷ்யாவிலிருந்து அவர்கள் சுதந்திரமாகி விட விரும்புகிறார்கள். சமதர்ம சமுதாய குடியரசுகளின் ஒன்றியம் எல்லாவற்றையுமே 1980களின் இறுதிப்பகுதியிலும் 1990களின் முற்பகுதியிலும் தொலைத்து விட்டார்கள்.

அதன் விளைவுகள் அடிப்படைவாத சக்திகளும், பாதாள உலகக்காரர்களும், 'சர்வதேச உளவு ஸ்தாபனங்களும் ரஷ்யாவையும், சோவியத்யூனியனின் முன்னாள் குடியரசுகளினதும் சமூக பொருளாதார வாழ்வை நாசப்படுத்தி வருகின்றன.

உலகில் எழுபது வருடங்களாக தலைநிமிர்ந்து நின்ற நாடு இன்று வறுமையும், ஊழலும், விபச்சாரமும், கள்ளக்கடத்தல் எல்லாவற்றுக்கும் மேலாக யுத்தமும், அரசியல் இராணுவச்சதிகளும் தலைவிரித்தாடும் பகுதிகளாக மாறியுள்ளன.

ஐரோப்பியாவின் ஒரு பகுதியையும் ஆசியாவின் ஒரு பகுதியையும் கொண்டிருந்த உலகின் மிகப் பெரிய குடியரசுகளாக விளங்கிய அந்த மாபெரும் நாடு இந்த நிலைக்குத்தள்ளப்பட்டிருப்பது உலக முதலாளித்துவத்தின் தலைமைச் சக்திகளும் ஒரு பிரதான பாத்திரத்தை வகித்தன என்பதை எவரும் இலகுவில் மறுத்துவிட முடியாது.

சோசலிச அரசுகளை நிர்மூலம் செய்வதில் அவர்கள் உள்ளிருந்தும் வெளியிலிருந்தும் பல சதிகளை மேற்கொள்கின்றனர். அதற்காக செச்சினியாவில் நடைபெறும் கொடுமைகள் அடக்கு முறைகளை நியாயப்படுத்திவிட முடியாது.

ஆனால் அமெரிக்க ஆட்சியாளர்கள் எப்போதும் மக்கள் சீனாவில், முன்னாள் சோவியத் யூனியனில், முன்னாள் யூகோஸ்லாவியாவில் மனித உரிமை நிலவரங்கள் பற்றி கவலைப்படுபவர்களாகக் காட்டிக்கொள்கிறார்கள்.

ஆனால் நேட்டோ ஈராக்கில் புரிந்த கொடுமைகள், தென்னாசியாவில் பாகிஸ்தானிய இராணுவ ஆட்சியாளர்களுக்கு ஆதரவளிப்பது, மத்திய கிழக்கில் இஸ்ரேலை செல்லப்பிள்ளையாக வைத்திருப்பது, ஆபிரிக்காவில் நைரியா போன்ற நாடுகளில் அடிக்கடி பதவிக்கு வரும் இராணுவ ஆட்சியாளர்களை ஆதரிப்பது. பேரு, சிலி போன்ற தென்னமெரிக்க நாடுகளிலும், லத்தீனமெரிக்காவிலும் நடைபெற்ற மனித உரிமை மீறல்கள் பற்றி மூச்சு விடுவதில்லை.

செச்சினியாவில் பல இளைஞர்கள் சிறைப்பிடிக்கப்பட்டிருப்பதாகப் பல பெண்கள் பாலியல் பலாத்காரத்துக்கு உட்படுத்தப்பட்டதாக பல்வேறு சர்வதேச உள்ளூர் தகவல் தொடர்பு சாதனங்கள் தெரிவித்திருந்தன.

பல அப்பாவிகள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். செச்சினியாவின் குரொஸ்னி நிர்மூலம் செய்யப்பட்டிருக்கிறது. என்பதெல்லாம் நம்பமுடியாத செய்திகள் அல்ல. லெனின் கூறிய ரசிய பெருமித உணர்வு இன்று காட்டுமிராண்டி வடிவத்தை எடுத்து விட்டதா என ஐயுறும் அளவுக்குத் தாக்குதல்கள் நடைபெறுகின்றன.

கம்யூனிஸ்டுகளின் செல்வாக்கு இப்போதும் கணிசமான அளவில் இருந்தாலும் ரஸ்சியாவில் தேசிய வாதிகளும், மேலாதிக்க வாதிகளும் அதேயளவுக்குச் செல்வாக்கைச் செலுத்துகிறார்கள் என்பதே உண்மை. •



வட அயர்லாந்து பிரைன்ரெம் விரிசல்

ஐரிஸ் குடியரசு இராணுவம் ஆயுதங்களைக் கையளித்த தையடுத்து அல்ஸ்டார் யூனியனிஸ்ட் கட்சியினருக்கும் அவர்களுக்கு மிடையேயான விரிசல் அதிகரித்துள்ளது.

இது ஐ.ஆர்.ஏ.யின் அரசியலமைப்பான சின்பெயினிலும் பிரதிபலிக்கத்தான் செய்தது. பல நூற்றாண்டுகளாக நிலவி 70களிலிருந்து தீவிரமடைந்த பிரச்சினை தற்போதுதான் 3, 4 வருடங்களுக்கு முன்னர் தீர்ந்துவிட்டதென்று நினைத்துக் கொண்டிருக்கும் போது அங்கு மறுபடியும் பிரச்சினை.

வட அயர்லாந்திலுள்ள கத்தோலிக்கர்கள் வட அயர்லாந்து ஐரிஸ் குடியரசுடன் இணையவேண்டும் என்று விரும்பினார்கள். ஆனால் அங்குள்ள புரட்டஸ்தாந்து மக்கள் நேரடியாக இங்கிலாந்தின் ஆட்சியின் கீழேயே வட அயர்லாந்து எப்போதும் இருந்ததுபோல் இருக்கவேண்டும் என்று விரும்பினார்கள். ஆனால் வன்முறை இரத்தம் சிந்துதலையடுத்து பேச்சுவார்த்தைகள் மூலம் நம்பிக்கைகள் உருவாக்கப்பட்டன.

இறுதியாக வடஅயர்லாந்தின் பல்வேறு மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளையும் உள்ளடக்கிய அரசாங்கம் வட அயர்லாந்தில் உருவாக்கப்பட்டது. ஆனால் ஐரிஸ் குடியரசு இராணுவத்திடமிருந்த ஆயுதம் ஒப்படைக்கப்படாதது இரு சமூகங்களிடையேயும் திரும்பவும் சந்தேகத்திற்கு வழிவகுத்தது.

இதனையடுத்து வடஅயர்லாந்து அரசாங்கத்தின் செயற்பாடுகளை கட்டுப்படுத்தும் அதிகாரத்தை பிரிட்டிஷ் அரசாங்கம் தனது கையில் எடுத்துள்ளது. விளைவு ஐ.ஆர்.ஏ.யும் அதன் அரசியல் பிரிவான சின்பெயினும் விரக்தியின் உச்சத்திற்குச் சென்றுள்ளார்கள்.

என்ன நம்ம ஊர் கதை மாதிரி இல்லையா? வடக்கு கிழக்கு மாகாண அரசாங்கம் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி. தலைமையில் உருவாக்கப்பட்டது சிறிலங்கா முஸ்லீம் காங்கிரஸ் மாகாண சபையில் அங்கத்துவம் வகித்தது. 1990 மார்ச்சில் வடக்கு-கிழக்கு மாகாணசபை பிரேமதாசா அரசாங்கத்தினால் கலைக்கப்பட்டது.

எது எப்படி இருப்பினும் பிரித்தானியாவில் அண்மைக்காலத்தில் அதிகாரப் பகிர்வு தொடர்பில் முக்கியமான சில நிகழ்ச்சிகள் நடைபெற்றன. ஸ்கொட்லாந்துக்குத் தனிப்பாராளுமன்றம் உருவாக்கப்பட்டது.

ஒரு முக்கியமான அம்சம். வட அயர்லாந்து சமாதான ஒப்பந்தம் மிகமிக முக்கியமான விடயம். தற்போது எழுந்துள்ள சிக்கல்கள், பின்னடைவுகள் தற்காலிகமாக இருக்க வேண்டும். அதுவே நிரந்தரமாகி விட்டால் இத்தகையப் பிரச்சினைகளைப் பேச்சுவார்த்தை மூலம் தீர்க்கும் இன்றைய சர்வதேசப் போக்கில் பாரதூரமான தாக்கத்தை ஏற்படுத்தலாம். •

குரூரத்தை ஏவுவிப்.....

08ம் பக்கம் தொடர்ச்சி

ஒரிஸாவின் புயல் வெள்ளப் பெருக்கும், மொசாம்பிக்கின் வெள்ளப் பெருக்கும் மரக்கிளையில் மானிடப் பிரசவமும், இந்தோனேசியாவின் காடுகள் தீப்பிடித்துக் கொண்டதும், பிலிப்பைன்ஸின் தாய்லாந்தின் பூகம்பங்களும் இயற்கையின் கோரத்தாண்டவங்கள். இங்கே, மனிதகுலம் படும் அவலத்தையிட்டு எவ்வளவு அதிர்ந்து போகிறோம்.

ஆனால் இங்கு மானிடர்கள் விளைவிக்கும் கோரங்கள் பற்றி நாம் மௌனமாகி விடுவது அல்லது அலட்டிக்கொள்ளாமல் விடுவது ஏன்!. மனிதன் சீற்றங்கொண்ட இயற்கையைவிட ஆபத்தானவனா!.

இவற்றையெல்லாம் பார்க்கையில் களைத்துப்போன, சிதறுண்டு சின்னாபின்னமாகிப்போன எமது சமூகம் திரும்பவும் ஒன்று சேர வேண்டும். ஒருசில தலைமுறையினருக்கு எமது பிரதேசங்கள் தெரியாது. தமது கிராமம் தெரியாது. இன்னுமொரு பகுதியினர் வேகமான துயரம் நிறைந்த, கொடூரமான நிகழ்ச்சிகளின் தொடரிலே வயதாகிப்போய் ஞாபகங்களைத் தொலைத்து அழுத்தமான சிலவற்றை மாத்திரம் வைத்துக்கொண்டு தமது தேசத்துக்காகக் காத்திருக்கிறார்கள்.

புத்தளத்திற்கு இடம் பெயர நிர்ப்பந்திக்கப்பட்ட முஸ்லிம் மக்கள் உட்பட உலகின் மூலைமுடுக்கெல்லாம் சிதறுண்டுவிட்ட இலட்சக்கணக்கான தமிழர்கள் காத்திருக்கிறார்கள் தம் தேசத்துக்குத் திரும்புவதற்கு!

எம் தேசத்தில் சமாதானம், நம்பிக்கை என்ற செங்கம்பளத்தை விரித்துச் சிதறுண்ட எம் மக்களை வரவேற்போம்!

புத்தாயிரத்தில் தோன்றியிருக்கும் சமாதானத்துக்கான அறிகுறிகளைப் பற்றிப்பிடித்து முன்னேறுவோம்!! •

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படித்ததும் ரசித்ததும்

சோக்கிரட்டீஸ்

நோர்வேயின் சமாதான முயற்சிகள் வெற்றி பெறுமா?

க. இளஞ்செழியன்
சாவக்கச்சேரி

வெண்ணை திரண்டுவரும் நேரமிது. தாளியை யாராவது உடைக்காமல் இருக்க வேண்டுமே!

☆☆☆

ஐ.தே.க–அரசு பேச்சுவார்த்தைகள் ஆக்கபூர்வமான விளைவுகளை ஏற்படுத்துமா?

எம்.ஜேசுபாலன்
நுவரெலியா.

தமிழ்-முஸ்லிம் சமூகங்களைச் சேர்ந்தவர்களை உப ஜனாதிபதியாக நியமிப்பது போன்ற சாரமற்ற விடயங்களை விடுத்து பொருள் பொதிந்த கனதியான விடயங்களைப் பற்றிப் பேச வேண்டும்.

☆☆☆

வடகிழக்கில் மக்கள் பங்குபற்றுதலுக்கான போராட்டங்கள் முன்னெடுத்துச் செல்லப்படுவதில் ஆர்வம் குறைவாக இருக்கிறதே?

வே. தர்மராஜன்
வவுனியா.

✏ மட்டக்களப்பிலும், யாழ்ப்பாணத்திலும் சமாதானத்தை வலியுறுத்திப் பேரணிகள் நடைபெறுகின்றன.

✏ மட்டக்களப்பில் விமான நிலைய விஸ்தரிப்புக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் உண்ணாவிரதப் போராட்டங்கள்.

✏ தொண்டர் ஆசிரியர்கள் தம்மை நிரந்தரமாக்கக்கோரி நடாத்தும் போராட்டங்கள்.

✏ கல்முனைப் பிரதேச மக்களுக்குத் தனிப் பிரதேச செயலகம் கோரி அம்பாறை மாவட்டத் தமிழர் மகாசபையும், ஏனைய அமைப்புக்களும் இணைந்து நடத்திய போராட்டங்கள்.

✏ தமிழ்ப் பாடப்புத்தகங்களில் காணப்படும் பிழைகள் பற்றி தமிழ் ஆசிரியர்கள் மாணவர்கள் விழிப்புணர்வு செயற்பாடுகள்.

✏ திருகோணமலையில் கப்பலுக்காகக் காத்திருக்கும் மக்கள் தங்களுக்குப் பிரயாண ஒழுங்கைச் செய்து தருமாறு நடத்தும் சத்தியாக்கிரக போராட்டங்கள்.

✏ கைது செய்யப்படுபவர்கள் காணாமல் போனவர்களுக்கு இயக்கங்கள் நடைபெறுவது தெரியவில்லையா?. இந்த மாதிரியான மக்கள் எதிர்ப்பியக்கங்கள் ஜனநாயகம் காணாமல் போய் விட்ட எமது சமூகத்தில் நல்ல சகுனம்.

☆☆☆

பயங்கரவாத எதிர்ப்பு முன்னணி, சிங்கள வீர விதான, பூமிபுத்திர, பிக்குகள், சங்கங்கள் என பேரினவாத அமைப்புக்கள் புற்றீசல்கள்போல் பெருகியுள்ளனவே!.

வி. சசி.
கொச்சிக்கடை.

முன்னோக்கிய திசையில் வாழ முற்படும் சிங்கள மக்கள் புதிய உலகத்தில் வாழ விரும்புபவர்களை பௌத்த மதத்தின் பேராலும், மக்களை நரகப் படுகுழிக்குள் தள்ள முயற்சிக்கும் இச் சக்திகள் ஒரு நாட்டின் சமூக அரசியல் அரங்கில் நடைபெறக்கூடிய நல்லவற்றையெல்லாம் நாசமாக்கிவிடும் இச் சக்திகள் சகல முனைகளிலும் முறியடிக்கப்பட வேண்டும்.

☆☆☆

பாலியல் பலாத்காரம், படுகொலைகள் நாட்டில் பரவலாகிவிட்டதே?

பாரதி சுமித்திரா
திருகோணமலை.

பாதாள உலகக் கோஷ்டிகள், படைகளை விட்டோடியவர்கள், இன மேலாதிக்க உணர்வுகள், பால் மேலாதிக்க உணர்வுகள் எல்லாமே எமது நாட்டில் பெருகி விட்டன. கிருஸாந்தி, ரஜனி, கோணேஸ்வரி, கமலிட்டா என இன்னும் பெயர் குறிப்பிடப்படாத பல பெண்கள் வட-கிழக்கிலும் ரீட்டா ஜோன், அனோமா பாடசாலை மாணவர்கள் என ஏனைய பகுதிகளிலும் வன்முறைகள் பெருகியுள்ளன. இந்த நாடு எந்தளவுக்கு நோய் கண்டுள்ளது என்பதற்கு இந்த பாலியல் பலாத்காரப் படுகொலைகள் ஓர் அளவுகோல்.

தென்னாசியாவில் அமெரிக்காவின் நலன்களின் அளவுகோல் என்ன?

வாரித்தம்பி சரவணன்
இலண்டன்.

நேரத்தில் அளக்கப்பட்டிருப்பதையா. பில்கிளிண்டன் இந்தியாவுக்கு ஐந்து நாட்கள். பாகிஸ்தானுக்கு ஐந்து மணித்தியாலங்கள். வங்கதேசத்துக்கு ஒருசில மணிதுளிகள்.

☆☆☆

இராஜகிரிய சேர்ப்பன்ரைன் தொடர்மாடி வீட்டுப் பகுதிகளில் நடந்த சண்டையைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

க. தங்கவடிவேல்
கொக்குட்டிச்சோலை.

வடக்கு கிழக்கைப் போன்று கொழும்பும் போர்க்களமாக மாறிவிட்டதோ என எண்ணத்தோன்றுகிறது.

☆☆☆

யாழ்ப்பாணத்தில் நடந்த ஊர்வலம்பற்றி...?

எஸ். வினோதா
பாரிஸ்.

யுத்தத்தால் சலித்து சமாதானத்துக்காக ஏங்கும் மக்களின் பிரதிபலிப்பு. ஆனால் அதனைத் தங்கள் சுயநலங்களுக்காக சமாதான வேசதாரிகள் பயன்படுத்திவிடக்கூடாது என்பதே இப்போதுள்ள பெரும் கவலை.

☆☆☆

கொழும்பில் வீதிச் சோதனைச் சாவடியொன்றில் சிங்களப் பெண் ஒருவரின்.ஆடையைக் கழற்றச் சொன்னார்களே!?

இரா.முகந்தன்
திருக்கோவில்.

தாம் செய்த இழிச் செயலை மூடி மறைப்பது மாத்திரமல்லாமல் அந்த பெண்ணைப் பற்றி ஒழுக்கம் கெட்டவள் என அவதூறும் பரப்பினார்கள். சாரதாம்பாள் பாலியல் பலாத்காரப் படுகொலைச் சம்பவத்தின்போது அயர்ந்து தூங்கிய மாதர் அமைப்புக்கள் இப்போது சாடமாடயாகக் கண்விழித்துள்ளன. ஆனால், இலங்கையர் அனைவரும் நிர்வாணம் கொண்டு திரிக!.

☆☆☆

மேற்கத்திய புகலிடத்தில் வரும் சஞ்சிகைகள், பத்திரிகைகள், எல்லாம் ஒரு விளம்பரம், செய்திக் கட்டுரை, என்று அரைத்தமாவை அரைத்த மாதிரி இருக்கின்றதே?

தி. நந்தாகரன்
புழல், சென்னை.

ஒருசில வேறுபட்ட சஞ்சிகைகள், பத்திரிகைகள் வெளிவருகின்றன. அவற்றை இனங்காண வேண்டும். தாயகம் என்றதொரு பத்திரிகை முன்னர் கனடாவிலிருந்து வெளிவந்தது. இப்போது அது நின்றுவிட்டது. குறிப்பிட்ட வாசகர்களின் தேவையைப் பூர்த்தி செய்யக்கூடியதாகச் சற்று கனதியாக "உயிர் நிழல்" என்றொரு சஞ்சிகை பாரிசில் இருந்து வெளிவருகிறது. பெண்ணுரிமை, தேசியம், தலித்தியம் உட்பட பல புதிய கருத்துக்களால் மாறுபட்ட ஆக்கங்களால் செழுமை பெற்று வந்தகொண்டிருக்கிறது. எமது மக்கள் மத்தியில் பிரபலப்படுத்த வேண்டிய சஞ்சிகை.

☆☆☆

தாஜ்மகால் திரைப்படம் காதலின் தூய்மையை வெளிப்படுத்துகிறதா?

வி.என். பிலோமினா
வெள்ளவத்தை.

அது காதலின் தூய்மையை வெளிப்படுத்துகிறதோ இல்லையோ. தமிழகத்தின் சில கிராமங்களின் நிலவும் கட்டுப்பாடுகள், ஈவிரக்கமற்ற கொடூரங்கள், அறியாமைகள், துயரங்களை வெளிக்காட்டி நிற்கிறது. ரேவதியின் நடிப்புக்கு அவரைப் பாராட்டாமல் இருக்க முடியாது. மணிவண்ணனும் நன்கு ஈடுகொடுத்திருக்கிறார். காதல் என்பதைவிட பிள்ளையாகவும், கணவனாகவும் வாய்த்த ஆண்களிடம் ரேவதி படும்பாடு இருக்கிறதே. அவ்விடத்தில் துன்பத்தில் உழலும் இலட்சக்கணக்கான பெண்களின் துயரத்தை ரேவதியினூடாக [illegible] கண்டு [illegible]ளலாம்.

தமிழர்களுக்கு எதிரான வன்முறை, இலங்கையின் சிங்களப் பகுதி எங்கும் பரவ ஆரம்பித்த போது, தெற்கில் கலவரங்களைக் கட்டுப்படுத்த ஜே.ஆர். ஜெயவர்த்தனா யாழ்ப்பாணத்திலிருந்து தனது துருப்புக்களை வாபஸ் பெற விரும்பினார். இதனால் யாழ்ப்பாணம், திருகோணமலையில் பாதுகாப்பை உறுதிப்படுத்த இந்தியத் துருப்புக்கள் வரவேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார்.

இணையச் சேவை செவ்வியிலிருந்து
முன்னாள் இந்திய வெளியுறவுச் செயலர் ஜே.என். தீக்சித்

✡✡✡✡

பெண்கள் மீதான பாலியல் வல்லுறவு என்பது தனியே பெண்கள் மீதான பிரச்சினை அல்ல. சமூகத்திலுள்ள ஆண்கள், பெண்கள் மட்டுமல்லாது இந்தப் பிரச்சினை அரசையும் சமூகத்தையும் சார்ந்தது.

சரிநிகரிலிருந்து
குமுதினி சாமுவேல்.

✡✡✡✡

இசை என்பது வெறும் சூத்திரமல்ல. அது ஆத்மார்த்தமானது.

ஏ.ஆர். ரகுமான்.

✡✡✡✡

எந்தவொரு மனிதனும் வேண்டுமென்றே தீயவனாவதில்லை. என்றும் அறியாமையே தீமைகளுக்குக் காரணம்.

-சோக்ரட்டீஸ்

✡✡✡✡

ஜெனடிக் ஆய்வுகளின்படி, உலக மனிதகுலத்திற்கெல்லாம் தாயாக விளங்கிய பெண் ஆபிரிக்காவில் இருந்ததாகத் தெரிகிறது. அவளும், அவளது பேத்திகளும், கொள்ளுப் பேத்திகளும் உலகம் முழுக்கச் சுற்றி வந்ததாகக் கூறப்படுகிறது. அப்படி இல்லாவிட்டால் நாட்டுக்கு நாடு எப்படி மனிதர்கள் உருவாகியிருக்க முடியும்.

கலைக் கதிர்

✡✡✡✡

கருத்துச் சுதந்திரம் என்ற கருதுகோள் எங்கள் சமூகத்துக்கு அந்நியமான ஒன்று போல தெரிகிறது. மரணமே தண்டனை என்ற விதிமுறைகள் இலக்குகள் அடைவதைப் பின்னடையச் செய்கின்றன.

இந்த சமூகத்தில் தியாகமும், துரோகமும் வெகு இலகுவான வரைவிலக்கணங்களில் அடங்கிவிட்ட நிலையில் மாற்றுக் கருத்துகள் துரோகங்களாக்கப்படுவது இலகுவாகி விடுகிறது. நம்பவைப்பது கடினமானால் கொல்லப்பட்டவனைத் தியாகி ஆக்குவ தும் நீள்கிறது. மனிதர்களைக் கொல்லலாம், ஆயிரம் ஆண்டுகள் சென்றாலும் கருத்துக்க ளைக் கொல்ல முடியாது. ஒரு "சோக்கிட்டீஸ்" ஐப் போல.

"தோற்றுத்தான் போவோமா"
விலிருந்து ஜோர்ஜ் குருசேவ்

✡✡✡✡

சோக்கிரட்டீஸ் எவ்வளவுதான் தேசபக்தராகவும், சமய பக்தராகவும் இருந்தபோதிலும் அவரது சமகாலத்தவர்கள் அவரைச் சந்தேகக் கண்களுடனேயே நோக்கினர். இதன் விளைவாக, சோக்கிரட்டீஸ் தேசத்தின் கடவுளரைப் புறக்கணித்தார் என்றும், இளைஞர்களின் ஒழுக்க நெறிகளைக் கெடுத்து அவர்களை ஜனநாயகத்தில் நின்றும் தூரமாக்க முயற்சித்தார் என்றும் அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டது.

அரும்பிலிருந்து.

✡✡✡✡

தமிழ்நாட்டுக் கதைகளில் வட்டார வழக்கு புதுமைப்பித்தன் காலத்திலிருந்து ஓர் இலக்கிய அந்தஸ்து பெற்றிருக்கிறது. புதுமைப்பித்தன் நெல்லைச்சீமை வழக்கை ஆண்டார் என்றால் தி.ஜானகிராமன் தஞ்சை மண் உரையாடலுக்கு உயிர் தந்தார்.

கணையாழியில்
இந்திராபார்த்தசாரதி.

✡✡✡✡

எழுதுவதைவிட வாதாடுவதே அறிவூட்டுவதற்குறிய சிறந்த வழிமுறை.

சோக்ரட்டீஸ்.

✡✡✡✡

வெண்புறா

ஒவ்வொரு மனித மனதிலும்
கொதிப்புணர்வுகள்
களையப்படட்டும்.

நெஞ்சங்கள்
கலவரமுண்டாக்காது
மனச்சாட்சியுடன்
விழிப்புணர்வைத்
தூண்டட்டும்.

மதங்கள்
மனிதனிடம் வேண்டாம்.
யானைகளிடமே இருக்கட்டும்.

இனங்களில்
பிரிவுகள் வேண்டாம்
உயிரைப்போல.
மனித இனம் ஒன்றுதான்.
உணர்ந்து கொள்ளுவோம்.

கருத்து மோதல்கள் தீர
கருவிகள் வேண்டாம்.
அது கொடூரங்களைப்
பெருக்கும்.
கோரங்களைப் படைக்கும்.

கோரமுகங்களை மறைக்க
வெண்புறாவை ஏந்துவதில்
மிக மிக அதிக சிந்தனையுடன்
மேல் நோக்கிச்
சிறகடிக்கட்டும். வெண்புறா.

கனகரவி.
(விடுதலைக்காய் நூலிலிருந்து)

கண்ணீர் அஞ்சலி

சிவஞானம் பிறேமதாஸன்

உதயம்: 04.05.1961 – அஸ்தமனம்: 17.03.2000

1980 களின் முற்பகுதியில் ஈழமாணவர் பொதுமன்றத்தில் இணைந்துகொண்ட தோழர் தாஸ் வன்னி மாவட்டத்தின் நீள அகலங்களில் அலைந்து திரிந்து தமிழ் பேசும் மக்களின் விடிவுக்காக உழைத்தவர். 1980 களின் நடுப்பகுதியில் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு மூன்று வருடங்களுக்கும் மேலாக சிறைவாசத்தை அனுபவித்தவர். இந்திய இலங்கை ஒப்பந்த காலத்திலும் தொடர்ந்து பணியாற்றியவர். அன்னாரின் மறைவுக்கு கண்ணோட்டம் தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



வெள்ளை வேட்டியும் வாலாமணியுமாய்
அவர் வருவதைப் பார்த்தாலே,
நூலைப் பிடித்தது போலாகிவிடும்
மாணவர் வரிசை.
ஒழுக்கத்தை ஊரில் விதைத்த தமிழ்
வாத்தியார் அவர்.
கூனிக்குறுகி நின்றார் வரிசையில்.
ஒரு மாணவனைப்போல்.
வயோதிபத்திலும்
முறுக்கேறிப்போயிருந்தவர்
கரைந்துபோயிருந்தார்
எரிந்த தீக்குச்சியாய்.

✡✡✡

"ஒக்கொம வெகிலா யண்ட"...
நீண்ட குழல் துப்பாக்கியொன்று
தோழுக்குமேலே துருத்திக்கொண்டிருக்க,
சிகரெட் துண்டிலிருந்த கடைசி
டம்மையும் உறுஞ்சி இழுத்து வீசியபடி.
உரத்த குரலில்
சொல்லிக்கொண்டுபோனான்
ஊர்காவற்படையாளி ஒருவன்.
வாழ்வின் வறுமை பிசுபிசுத்திருந்தது
அவன் முகப்பரப்பில்.

✡✡✡

அந்நியநாட்டு எல்லைக்கோட்டு
நிபந்தனைகள்,
குறுக்கு விசாரணைகள்,
நேர்முகப்பரீட்சைகள் எல்லாமே...
நடத்தி முடித்த சோர்வில் அவர்களும்,
நடந்து முடிந்த சோர்வில் இவர்களும்
நாஸ்திகரையும் ஆஸ்த்திகராக மாற்றும்
அவர்களின் பார்வைகளோடு.

✡✡✡

சவத்தைப் புதைத்துவிட்டு
கொள்ளிக்குடம் உடைக்கச் சுற்றிச்
சுற்றி வருவதைப்போலொரு வளைப்பில்
"தெமழ இன்னவாத" என்றுமட்டும்
சில இடங்களில் அவர்கள்
திரும்பத் திரும்பக் கேட்கும்போது...
நெஞ்சக்குழிக்குள் ஈரம் மரித்துப்போக,
சற்று தொலைதூர வாகன அசைவில்
பதுங்கியிருந்த மூச்சு வெளிவரும்
சூடாய்.

✡✡✡

நேரத்தின் பெறுமானத்தைக் சுசக்கி
எறிந்து,
மனித சஞ்சாரமே
மரணித்துப்போனதொரு நிலப்பரப்பு
இடைவெளிக்குள்.
பாறைகள், உயர்ந்த மலைகள்,
பட்டுப்போன மரத்தைச் சுற்றிய
பசுங்கொடிகள்,
காடுகளின் பசுமைகள்.....
எதனையும் ரசிப்பதற்கு வெறுமையாய்.
பொழுது சாய்வதற்குள்ளும்
விடிவதற்குள்ளும்
இத்தனையும்.

✡✡✡

பேப்பரை வாசித்த வாத்தியார்
அதிர்ந்துபோனார்.
கொழும்பில் குண்டுவெடிப்பாம்.
தனது சோத்துப் பார்சலுக்குள்ளிருந்த
அவித்த முட்டையைப்
புட்டுப்பார்த்ததுபோன்ற
சோதனைச் சாவடிகளைக் கடந்து ...
எப்படி வந்தது கொழும்புக்குக் குண்டு!

"ஹே ராம்" ஜெய.....

05ம் பக்கம் தொடர்ச்சி

இந் நிலைமையில் இந்த இனக் கலவரத்திற்கு எதிராக மகாத்மா காந்தியின் அகிம்சா இயக்கம் பற்றிய செய்தி எங்கும் பரவுகிறது. ஆனால் சாகேத்ராம் காந்திக்கு எதிரான தீவிர விமர்சகர்கள் கூட்டத்துடனேயே இணைகிறார்.

திரைப் படத்தின் மீதிப்பகுதி கதாநாயகனின் சித்தாந்தக் குழப்பநிலை ஒரு தேடலை மேற்கொள்வதாகவே உள்ளது.

இப் படம் வெவ்வேறுபட்ட வகையான விமர்சனங்களுக்கும் உள்ளாகியுள்ளது. இது ஒரு இந்துத்துவ திரைப்படம் என்றும் மகாத்மா காந்தியின் படுகொலை செய்த கோட்சேயை நியாயப் படுத்துகிறது என்ற கருத்துக்களும் பரவலாக ஏற்பட்டன. அயோத்தியாவில் இப் படம் திரையிடப்பட்டபோது ஒரு பகுதியினர் இதைத் தடைப்படுத்தும் முயற்சியிலும் ஈடுபட்டனர். படத்தை நோக்கும் பார்வையின் கோளாறு படத்திலும் அவர்களுக்கு கோளாறையே காட்டுவதாகும்.

வர்ணனைக்குள் அடக்க முடியாத அளவுக்கு இந்து, முஸ்லீம் இனக்கலவரம் நடந்ததையும், பல பத்தாயிரம் பொது மக்கள், சிறுவர்கள், பெண்கள், வயோதிபர்கள் என்று வேறுபாடின்றி இனவெறியர்கள் மேற்கொண்ட காட்டுமிராண்டித்தனமான படுகொலைகளுக்கு பலியானதையும், பல மில்லியன் மக்கள் அகதிகளானதையும், முத்தாய்ப்பாக மகாத்மா காந்தி கோட்சேயினால் சுட்டுக்கொலை செய்யப்பட்டதையும், வரலாற்றிலிருந்து மறைத்துவிட முடியாது. அன்றைய நிகழ்வின் பாதிப்புக்களிலிருந்து மீளாதவர்கள் இன்னமும் இருக்கிறார்கள்.

பல இலட்சம் பேரின் நீண்ட கதைகளின் தொகுப்பான வரலாற்றை முழுமையாக உள்வாங்கி அவற்றை இரண்டரை மணி நேரத் திரைப்படக் காட்சிகளினூடாக அவற்றை வெளிப்படுத்தியுள்ள இயக்கம் அபாரம். அன்றைய உணர்வுகளும் நிகழ்ந்தவைகளின் தன்மைகளும் தப்பாமல் பிரதிபலிக்கும் வகையாகவும், அதேவேளை அதனால் அரசியல் அரங்கில் வேண்டாத தாக்கத்தையோ இனங்களுக்கிடையே பாதகமாக பாதிப்பையோ ஏற்படுத்திவிடாத வகையில் ஆக்கப் பட்டிருப்பது பாராட்டுக்குரியதொன்றாகும்.

எழுதப்படாத ஒரு நாவலை நவீன தொழில் நுட்பங்களுடன் ஒரு வரலாற்றுக் கதைத் திரைப் படத்துக்கான உணர்வைத்தரும் வகையில் குறைவின்றி தயாரித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

ஈர்க்கும் உரையாடல்கள், கவனமும் திட்டமிடலும் கொண்ட இயக்கம், பொருத்தமான நடிப்புகள், தமிழில் இளையராஜாவின் இசைப் பரிசோதனைகள் திருப்திகரமாக அமைந்துள்ளன. இப்படம் புதிய பல விடயங்களைத் தமிழ் திரைப் படங்களுக்கு அறிமுகப் படுத்துகின்றது.

அபர்ணாவின் கற்பழிப்பு மற்றும் கொலை, அம்ஜத்தின் முடிவு, தனது திருமண இரவு அன்று கல்கத்தாவில் கமலுக்கு ஏற்பட்ட கடந்த காலத்தின் பயங்கரமான நினைவுகள், தனது அன்புக்குரியவர்களைத் தேடியலையும் பார்வையற்ற சிறுமி என்பன நினைவில் நிற்கும் வகையான பாதிப்புக்கள்.

இயக்குனர் என்ற வகையில் கமல் உணர்ச்சிப் பூர்வமான சிற்பியாகப் பரிணமிக்கும் அதே வேளை அவரது நிதானமான பாத்திரச் செயற்பாடு அவர் ஒரு சிறந்த நடிகர் என்பதை உறுதிப்படுத்துகின்றது.

கமலின் இந்தப் படம் தமிழுக்கு ஒரு புதிய மைல்கல்லாக அமையட்டும். இந்தப் படத்திற்கு ஏற்பட்டிருக்கும் செலவு வர்த்தக ரீதியான வெற்றியை எதிர்பார்த்து நிற்பது இயல்பேயாகும். தமிழ்த் திரையுலகில் கமல் மேற்கொண்டுள்ள இந்தப் படத்திற்கு பாராட்டுக்களை மட்டுமல்லாது உரிய பரிசுகளை தமிழ் பட ரசிகர்கள் அளித்தால்தான் இவ்வாறான பரிசோதனை முயற்சிகள் தொழிலாக அமையும் நிலை ஏற்படும்.

குறுக்கெழுத்துப் போட்டி - 02



இடமிருந்து வலம்

1. தொலைந்தும் புதைந்தும் போயிருந்த சமாதான நம்பிக்கைகள் இந்த அரசின் தலையீட்டினால்தான் மறுபடியும் துளிர்விட ஆரம்பித்துள்ளது.

5. சர்வதேச பொலிஸ்காரனாய்த் தன்னை நடத்திக்கொள்ளும் இந்த நாடு, தொட்டிலையும் ஆட்டிப் பிள்ளையையும் கிள்ளி விடுவதில் அசகாய சூரனாம்.

10. ஒரு ஆணின் இரு மனைவியரை இப்படி அழைப்பர். "குழம்பியுள்ளது"

17. காந்திஜி இன் சுதேச எண்ணங்களில் இதுகொண்டு ஆடை நெய்வதும் ஒன்றாக இருந்தது. "மாறியுள்ளது"

19. "வீணே உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்து, இந்த தொழிலுக்கே வந்தனை செய்வோம்" என்றான் பாரதி.

23. குழந்தைகள், சிறுவர்கள் மகிழ்வதற்கு மட்டுமல்ல, வளரும் பயிருக்கு உரமிடுவது போல் அறிவூட்டவும் பாட்டி இதை சொல்வதுண்டு.

26. அரசனின் கையிலிருப்பது செங்கோல். மந்திரவாதியின் கையிலிருப்பது மந்திரக் கோல். இது இரண்டுக்கும் பொதுவானது.

31. பிரணவ மந்திரம்.

34. இதற்குமேல் வளர்ந்தால் தந்தைக்குப் பிள்ளையும் தோழனாம்.

38. தமிழுக்கும் இதுவென்று பேர் சொல்லும் தேசிய தமிழ் சஞ்சிகை.

42. அரசியல்வாதிகள் பதவிப்பிரமாணம் செய்வதுபோல், அரசர்கள் இதைச் சூடிக் கொள்வார்கள். "இடம்மாறி வருகிறது"

46. ஒரு காலத்தில் அரசர்கள் மிகுந்த வேட்டைப்பிரியர்களாம். நமது அரசியல்வாதிகளும் என்ன சளைத்தவர்களா? இந்த வேட்டையாடுவதில் அவர்களுக்கு நிகர் அவர்களே!.

50. அடக்கியாளவேண்டிய மனித குணங்களில் ஒன்று. மதயானை போலல்லாது.

55. தடிமலுக்கு அறிகுறி. "குழம்பியுள்ளது"

60. இத்தனையும் சாதித்த மனிதன் தன் முகத்தைக் கண்ணாடியில் இதுவாகத்தான் கண்டுகொள்ள முடியும். இடம்மாறு தோற்ற வழுவுடன் வரும் இது இங்கும் இடம்மாறி வருகிறது.

73. பகிடி, கேலி இதுவும் உப்பைப்போல் அளவோடு இருப்பது ஆரோக்கியம்.

78. "அற்ற குளத்தில் அறுநீர்ப்பறவைபோல் அல்லாமல் ஒட்டியும் இதுவும்போல் இருக்க வேண்டுமாம்" உண்மை உறவு.

மேலிருந்து கீழ்

1. ஒருவரது சிந்தனை, எண்ணம் இதுவும் தெளிவாக இருக்கவேண்டுமாம்.

2. "உன்னோடு வாழாத வாழ்வென்ன வாழ்வு" என்று அமர்க்களப்பட்ட திரைப்படம். "குழம்பியுள்ளது"

3. உடலுக்கு வெளியேயும் இதைப் போடுவதுண்டு. உள்ளத்துக்கு உள்ளேயும் இதைப் போடுவதுண்டு.

5. மேலதிகமாக உள்ளதை இப்படிக் கூறுவர்.

6. கட்டிலுக்கு இது மிகப் பொருத்தம்.

8. இலட்சியம், நோக்கம் இது இல்லாது வாழ்வில் முன்னேற முடியாது. குழப்பமில்லாது இருக்கவேண்டிய இது "குழம்பியுள்ளது"

9. மோதலில் முளைவிடும் இது சிலவேளை சாதலிலும் முடியும்.

31. வேதத்தை இப்படிசெய்வது வழமை.

34. தூத்துக்குடி அல்ல சாத்துக்குடி.

39. நெஞ்சில் பாயாது இதில் பாய்ந்தால் கோழை என்பர். "குழம்பியுள்ளது"

42. பிரபஞ்சத்தின் முடிவும், இதுவும் அஷ்டவதானிகளுக்குக்கூட கிட்டாத விடயம். "தலைகீழாகவே" வருகிறது.

45. பாம்புக்கு மகுடிபோல், இவரது தலையணை மந்திரம்.

46. இராமாயணம் எழுதியவர். கம்பரல்ல.

58. மிகுந்த பிரயத்தனத்தை, இதைக் கயிறாகத் திரிப்பதற்கு ஒப்பிடுவர்.

62. இது பாதாளம் வரை பாயுமாம். அதனால், "தலைகீழாகவே" உள்ளது.

போட்டி இல:01 இல் சரியான விடை எழுதிப் பரிசு பெறும் அதிஷ்ட சாலி:-

கோ. தனிகாசலம்
தாளங்குடா-02
ஆரையம்பதி (கி.மா)

(இவருக்கான பரிசுத் தொகை அனுப்பிவைக்கப்படும்)

பாராட்டு பெறுவோர்:

1. எஸ். பாபு
இல: 107 பூந்தோட்டம், வவுனியா.
2. தி. நந்தினி
மார்க்கட் வீதி, அக்கரைப்பற்று.
3. க. தீபன்
ஆஸ்பத்திரிவீதி, திருமலை.
4. ந. மனோ
ஸ்ரேசன் வீதி, மட்டக்களப்பு.
5. மு. மலர்விழி
கச்சேரி வீதி, யாழ்ப்பாணம்.

குறுக்கெழுத்துப்போட்டி 01க்கான சரியான விடைகள்

இடமிருந்து வலம்

1. சமாதானம்	50. மா
7. யுத்தம்	54. விமலா
11. ஒற்றுமை	63. பயம்
25. ஒப்பந்தம்	71. மரணம்
31. மந்திரி	76. விடகவி
38. குதிரை	81. ஈயம்
41. உதாரணம்	85. திருவாசகம்
47. கறி	94. பிறப்பிடம்

மேலிருந்து கீழ்

1. சம உரிமை	34. திரவியம்
2. மாற்றாந்தாய்	45. மணம்
3. மறுதாரம்	59. விளக்கம்
7. யுகம்	61. சமயம்
8. பகுத்தறிவு	63. பணம்
9. வதந்தி	67. தீகவாபி
16. யாப்பு	72. ஈரம்
30. தரைமார்க்கம்	

கீழுள்ள முகவரிக்கூப்பனை வெட்டி ஒட்டி தபாலட்டையில் மாத்திரமே எழுதி எதிர்வரும் 30ம் திகதிக்குள் அனுப்பிவையுங்கள்.

சரியான விடைகளை எழுதிப் பரிசு பெறும் அதிஷ்டசாலிக்கு ரூபா 200 அனுப்பி வைக்கப்படும். ஐந்து பேர் பாராட்டுப்பெற தேர்ந்தெடுக்கப்படுவர்.

குறுக்கெழுத்துப் போட்டி இல:02
கண்ணோட்டம்
37/2, 1/1 விமலசார வீதி
களுபோவில, தெஹிவளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணோட்டம்

"நாம் மக்களுக்காகப் போராடுவதென்பது எம்மீது சுமத்தப்பட்ட கடமையே தவிர எமக்கு வழங்கப்பட்ட அதிகாரமல்ல"

No 37/2 - 1/1, Wimalasara Road, Kalubowila, Dehiwala

யுத்தம் புரிவோரே மக்களை விட்டு விடுங்கள்

மட்டுநகரின் புதிய தலைவலி

மட்டுநகரில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள பாஸ் நடைமுறை மக்களுக்கும் அரசுக்கும் உள்ள உறவு முறைகளில் பாரதூரமான இடைவெளியை ஏற்படுத்துவதோடு, பெரும் ஊழல் மோசடிகளுக்கும் வழிவகுக்கும்.

இன்று வவுனியாவிலும், மன்னாரிலும் இந்தப் பாஸ் நடைமுறை மக்கள் மத்தியில் அதிருப்தியையும், சில பொலிஸ் அதிகாரிகளையும், சாதாரண பொலிஸ்காரர்கள் சிலரையும், சில உள்ளூர் புரோக்கர்களையும் இலட்சாதிபதிகளாகவும் மாற்றியுள்ளது.

அதே போன்றதொரு நிலையே மட்டக்களப்பில் தோன்றலாம். ஏற்கனவே பல கெடுபிடிகளினுள் வாழும் மட்டக்களப்பு, அம்பாறை மக்களுக்கு இது புதியதொரு தலைவலியை உருவாக்கியிருக்கிறது. தவிர்க்க முடியாத சோதனைச் சாவடிகளால் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட மக்களின் நாளாந்த நேரத்தின் ஒரு பகுதி விழுங்கப்படுகிறது. விவசாயம், மீன்பிடி ஆகிய அத்தியாவசியத் தொழில்கள் அரை முடக்க நிலையிலேயே இருக்கின்றன.

தற்போது பேசப்படும் பாஸ் நடைமுறை அமுலுக்கு வந்தால் மட்டக்களப்பு அம்பாறை மாவட்டத்தின் நாளாந்த வாழ்க்கை முற்று முழுதாகவே ஸ்தம்பித்துவிடும் அபாயம் உண்டு.

நாளாந்தம் மரணங்கள், காயங்களைச் சந்திக்கும் மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் உள்ள தொலைதூர கிராமங்களின் மக்கள் அத்தியாவசியத் தேவைகளுக்காகப் போக்குவரத்துச் செய்ய வேண்டியவர்கள் மேலும் பெரும் சிரமங்களை எதிர் நோக்க நேரிடும்.

இந்தப் பாஸ் நடைமுறையை அங்கு அமுலாக்க வேண்டாம் என்று மத ஸ்தாபனங்கள், தமிழ் முஸ்லீம் அரசியல் கட்சிகள், அரச சார்பற்ற நிறுவனங்கள் கோரிக்கை விடுத்துள்ளன. ஆனால் இவை யாருடைய செவியிலும் விழுந்ததாகத் தெரியவில்லை. பாதுகாப்புக் கண்ணோட்டத்தில் மாத்திரம்தான் இந்தப் பாஸ் விடயம் அணுகப்படுகிறது. ஆனால் அந்த நோக்கங்களுக்கு மாறாக எதிர்மாறான விளைவுகளையே அது ஏற்படுத்தும். பணமும் செல்வாக்கும் இருந்தால் யாரும் எந்தப் பாஸ் வேண்டுமாலும் எடுத்துக் கொள்ளலாம். இது ஊரறிந்த உண்மை.

கொழும்பு குண்டு வெடிப்பு

உடல் சிதறி, உயிரழியும் குரூரம் இன்று எமது பத்திரிகைகளின் பக்கங்களில் பல வண்ணங்களில் நிறைகிறது. யாரும் எப்போது வேண்டுமானாலும் மரணிக்கலாம் என்பது இன்று இலங்கையின் நாளாந்த வாழ்க்கையின் இயல்பாகிவிட்டது. வன்முறையாளர்கள் சாதாரண மனிதர்களின் தலைவிதியை தங்கள் கையில் எடுத்துக் கொண்டு விட்டார்கள்.

யுத்தத்தில் சம்பந்தப்படாத சாதாரண மக்களைக் கேடயமாக வைத்து சண்டைகள் நடைபெறுகின்றன. இவர்களின் மரணங்களுக்கோ, வேறு பாதிப்புக்களுக்கோ எந்தவிதமான முக்கியத்துவமும் இல்லை. கோட்டை சிறீஜெயவர்த்தனபுர பாராளுமன்றக் கட்டிடத் தொகுதியில் ஏற்பட்ட அதிர்வுகளிலிருந்து கூட நிலைமையின் பாரதூரத் தன்மையை யாரும் உணர்ந்ததாகத் தெரியவில்லை. நீண்ட காலத்தில் இந்த நாட்டில் அநியாய இரத்தம் சிந்துதலை நிறுத்திப் பல இன மக்களும் ஐக்கியமாக வாழும் நிலை உருவாக்கப்படல் வேண்டும். என்ற நிலை இல்லை.

இந்த வன்முறைகள் தொடர்பாக சிவில் சமூகம் எனப்படுவோர், மதத்தலைவர்கள் மற்றும் அரசியல் கட்சிகளல்லாத பிரமுகர்களினடையே நிலவும் நீடித்த மௌனம், பாரதூரமான விளைவுகளையே ஏற்படுத்தலாம். வன்முறை சமூகத்தின் சகல மட்டங்களுக்கும் இன்று பரவி விட்டிருக்கிறது. இது பற்றி தீவிர அக்கறை செலுத்தப்படா விட்டால் இந்து சமுத்திரத்தின் முத்து நரகமாகி விடும்.

யாழ்ப்பாணச் சண்டைகள்

யாழ்ப்பாணத்தின் வடக்கு, கிழக்கு, தெற்கு கரையோரப் பகுதிகளில் சண்டைகள் உக்கிரம் பெற்றிருக்கும் நிலையில் மக்கள் தமக்கு பாதுகாப்பான இருப்பிடங்களைத் தேடிக் கொள்வது பெரும் பிரச்சினையாகி உள்ளது. ஒவ்வொரு மனிதனுக்கும் நடமாடும் சுதந்திரத்துடன் பாதுகாப்புடன் உயிருடன் வாழும் உரிமை உள்ளது. ஆனால் இங்கு அந்த உரிமை மக்களுக்கு மறுக்கப்பட்டிருக்கிறது.

நவீன உலகில் போர் புரிபவர்களைவிடப், போரில் சம்பந்தப்படாத பெரும்பாலான மக்களின் நலன்கள் பற்றியே அதிக கரிசனை செலுத்தப்படுகிறது. அவர்களைப் பணயம் வைக்கும் விதமான போர் நடவடிக்கைகள் கண்டிக்கப்பட வேண்டியவையே. தற்போது மக்கள் நாளாந்தம் இடம் பெயர்வது என்பது இயல்பான விடயமாகி விட்டது.

1995ம் ஆண்டு யாழ் வலிகாமத்திலிருந்து மக்கள் இடம் பெயர்ந்தது சரித்திர, முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்பட்டது. அதே போன்று இல்லாவிட்டாலும் ஆயிரக்கணக்கான மக்கள் தங்கள் இருப்பிடங்களை விட்டு அன்றாடம் இடம் பெயர்வது சர்வசாதாரண விடயமாகிவிட்டது.

யுத்தத்தில் நெடுந்தூரம் சென்று தாக்கக்கூடிய பீரங்கிகள் "ஆட்டிலெறிகள்" பரவலாகப் புழக்கத்துக்கு வந்தபோதுதான் இடம் பெயர்வுகளிலும் இத்தகைய குணாம்ச ரீதியான மாற்றங்கள் ஏற்பட்டன.

மக்களைச் சிறிதளவும் மதிக்காத இந்த நிலை மிக அவலமானதாகும். இந்த நிலையில்தான் மக்கள் தங்கள் முகத்தை வெளிக்காட்ட வேண்டிய தேவை எழுகிறது.

யாழ்ப்பாணத்திலும் மட்டக்களப்பிலும் நடைபெற்ற சமாதான பேரணிகள் மக்களின் எண்ணங்களில் பிரதிபலிப்பதாக இருந்தாலும் சகல இத்தகைய இயக்கங்களும் சகல அரங்குகளிலும் முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டும்.

ஒளிமயமான எதிர்காலத்தைக்காண

ஏங்கி நிற்கும் இலங்கை

மூன்று முக்கியமான விடயங்கள் இன்று இலங்கையின் அரசியல் அரங்கில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

1. அரசுக்கும் ஐ.தே.க க்கும் இடையேயான அரசியல் யாப்புச் சீர்திருத்தங்கள் தொடர்பான பேச்சுவார்த்தை.

2. நோர்வேயின் அனுசரணையுடனான பேச்சுவார்த்தைக்கான முன்னேற்பாடுகள்.

3. யாழ் குடா நாட்டில் தீவிரம் டைந்திருக்கும் யுத்தமும், கொழும்புக் குண்டு வெடிப்புக்களும்.

இந்த மூன்று விடயங்களும் ஒன்றோடொன்று தொடர்புடையவை. சிக்கலான முறையில் பின்னிப்பிணைந்தவை.

யுத்தம் முடிவுக்கு வரவேண்டும் என்பதிலும், தமிழ் மக்களுக்கு அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்பதிலும் இன்று பெருவாரியான சாதாரண மக்களுக்கு எந்தப் பிரச்சினையும் கிடையாது.

ஆனால் இனவாதிகளும், சில தேசிய கட்சிகள் என்று சொல்லப்படுபவற்றின் தலைவர்களும், தங்களின் நலன்களுக்கு இந்தப் பிரச்சினைகளை எந்தளவுக்குப் பயன்படுத்தலாம் என்பதைப் பற்றியே அவர்கள் சிந்திப்பதாகத் தெரிகிறது.

ஐ.தே.க அரசுடன் நடத்தும் பேச்சுவார்த்தைகளில் சிறுபான்மை இனத்தைச் சேர்ந்தவர்களுக்கு உப ஜனாதிபதி பதவி வழங்குதல், அல்லது அமைவாக போகும் பிரதேச சபையிலுள்ள மந்திரி சபைக்கு கட்சிகள் பெற்ற வாக்குகள் அடிப்படையில் மந்திரி பதவி வழங்குதல் போன்ற உப்புச் சப்பற்ற விடயங்களைப் பற்றியே அக்கறைச் செலுத்துவதாகத் தெரிகிறது.

இது ஐ.தே.க வின் சிறுபான்மை இனங்கள் தொடர்பான எண்ணப்பாட்டையே வெளிப்படுத்தி நிற்கிறது.

தமிழர்களுக்குத் தேவைப்படுவது "சிலுசிலுப்பல்ல பலகாரம்" என்பதைச் சம்பந்தப்பட்டவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

தனிப்பட்ட சிலருக்கு பதவிக் கிடைக்கச் செய்வதன் மூலம் பிரச்சினைகளைச் சமாளித்துவிடலாம் என எளிதாகத்தான் ஐ.தே.க வினர் சிந்திப்பது போல் தெரிகிறது. பல லட்சக்கணக்கான உயிர், உடைமை இழப்புடன் சம்பந்தப்பட்ட பிரச்சினை என்பதும், இதன் வரலாற்று அம்சமும் அவர்களால் உதாசீனம் செய்யப்படுகிறது.

எனவே தமிழ் மக்களின் ஜீவாதார நலன்களான வடக்கு-கிழக்கு இணைப்பு, பொலிஸ் அதிகாரம், நீதி நிர்வாகம், நிலம் சம்பந்தப்பட்ட விடயங்கள் முக்கியமானவை. இவற்றைப் புறக்கணித்து விட்டு அல்லது தெளிவில்லாமல் விட்டுவிட்டு மேற்கொள்ளப்படும் தீர்வு முயற்சிகள் தமிழர்களின் அபிலாசைகளைச் சிறிதளவும் பிரதிபலிப்பதாக இருக்க முடியாது.

சிங்கள இனவாத சக்திகள்

சிங்கள இனவாத சக்திகளோ அதிகாரப் பரவலாக்கலே நடைபெறக் கூடாது என்ற நிலைப்பாட்டில்தான் நின்றுகொண்டிருக்கின்றன. அவர்களிடம் இந்த நாடு எவ்வளவு பாரதூரமான நிலையில் இருக்கிறது என்பதைப் பற்றி அவர்களிடம் திட்டவட்டமான மதிப்பீடுகள் எதுவும் இல்லை.

தமிழ் மக்களுக்கு அதிகாரம் பகிரப்படாவிட்டால் எத்தகைய பாரதூரமான விளைவுகள் ஏற்படும் என்பதெல்லாம் அவர்களுக்குப் புரியாது.

தொடர்ச்சி 04ம் பக்கம்

நகரங்களில் மலையக யுவதிகள் அனுபவிக்கும் இன்னல்கள்

மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் பெரும்பாலான குடும்பங்களில் காணப்படும் யுவதிகள் தங்கள் குடும்பங்களில் பெரும் பொருளாதாரநெருக்கடிக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது. இதைத் தவிர்க்க இவர்கள் தங்கள் தங்கள் பிரதேசங்களில் தொழில் செய்வதற்கு ஏற்ற தொழில் வாய்ப்புக்கள் மலையகத்தில் இல்லை.

இதன் காரணமாக இந்த யுவதிகள் தங்களுடைய கல்வியைப் பாதியில் நிறுத்தி விட்டுத் தொழில் செய்வதற்காக கொழும்பு, கண்டி போன்ற நகரங்களில் உள்ள ஆடைத் தொழிற்சாலைகளுக்குச் செல்கிறார்கள். ஆனால் இவர்களுக்கோ பல இன்னல்கள்.

ஆரம்பத்தில் வேலைக்குச் செல்லும் இவர்களுக்குப் பயிற்சிக்காலம் ஆறுமாதம் முடியும்வரை மாதச் சம்பளமாக 2000 ரூபாவும், நிரந்தரமாக்கப்பட்டபின் 3150 ரூபாவும் கொடுக்கப்பட வேண்டும். கொடுக்கப்படும் மாதச்சம்பளம் 3150 ரூபாவில் கழிவுத் தொகை போக அவர்களுக்கு மிஞ்சுவது ஒரு குறிப்பிட்ட தொகை மாத்திரமே.

அத்துடன் பெரும்பாலான தனியார் ஆடைத் தொழிற்சாலைகளில் தொழிலாளர்களிடம் சேமலாபநிதி என்ற பெயரில் அறவிடப்படும் நிதியானது ஊழியர் சேமலாப நிதியத்திற்கு அனுப்பப்படு வதில்லை.

இரவு நேரத்தில் வேலைக்குச் செல்லும் யுவதிகளுக்குப் பாதுகாப்பான தங்குமிட விடுதி வசதிகள் இல்லை. வேலை முடிந்தபின் இருப்பிடம் திரும்புவதற்குப் பாதுகாப்பான போக்குவரத்து வசதிகளும் இல்லை.

இவர்கள் ஆடைத் தொழிற்சாலைக்கு அண்மையில் உள்ள வீடுகளிலோ அல்லது தங்களுக்குப் பரிட்சயமான வீடுகளிலோ வாடகை கொடுத்துத் தங்கியிருந்து தினமும் வேலைக்குச் செல்லும் போதும், திரும்பும் போதும் அந்தந்த பகுதிகளில் காணப்படும் ரௌடிகளின் ஆட்டோ சாரதிகளின் குரங்குச் சேட்டைகளுக்கும் முகம் கொடுக்க வேண்டியுள்ளது.

அதுமட்டுமல்லாமல், அவர்களின் தவறான வழியிலான நிர்ப்பந்தங்களுக்கும் இடம் கொடுக்க வேண்டியுள்ளது. இதையெல்லாம் நினைத்து யாரை நொந்து கொள்வது?. மலையக மக்களுக்கு இதுவெல்லாம் ஒரு சாபக்கேடு தான்.

இந்த யுவதிகள் தங்கள் ஊதியத்துக்காக எட்டு மணிநேர வேலையை முடித்த பின்பு மேலதிக ஊதியத்துக்காக உழைத்தும் இறுதியில் வாடகை, உணவு, போக்குவரத்து செலவுகள் போக மிஞ்சும் தொகையோ மிக சொற்பம்தான். இதைக் கொண்டு தங்

தொடர்ச்சி 04ம் பக்கம்

த. சுபத்திரன் 310 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் அவர்களால் இரத்திரனப்பிட்டிய C.R.C PRESS அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org